பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

Registered as a Newspaper

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மாசி 26 | (10394) | வியாழக்கிழமை | ஓசை 20

## 35 ஆயிரம் பயிலுநர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனக் கடிதம்

சுமார் 35 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கும் கடிதங்களை நேற்று சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கும் படி கல்விச்சேவைச் சபைக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. நான்கு வருட சேவையைப் பூர்த்திசெய்த பயிலுநர் ஆசிரியர்களும் ஒருவருட சேவையைப் பூர்த்திசெய்த பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களும் இதன் கீழ் நிரந்தரமாக்கப்படுவர். சாதாரண பயிலுநர் ஆசிரியர்களுக்கான சராசரி வருடாந்த சம்பளம் 24, 120 ரூபாவாகும் அரசாங்க ஊழியர்களுக்கான சகல கொடுப்பனவுகளும் இவர்களுக்குக் கிடைக்கும். இத்திட்டத்தின்கீழ் ஒருவருடத்தைப் (6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கை பிரிப்பதில் ஜனாதிபதி டி.பி. தீவிர அக்கறை

## தற்காலிக இணைப்பை ரத்துசெய்ய சர்வசன வாக்கெடுப்பிற்கு முயற்சி

[லண்டன்]

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாகவேனும் இணைந்திருப்பதை சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விரும்பவில்லை. அவர் இவ்விரண்டு மாகாணங்களையும் நிரந்தரமாக தனித்தனி மாகாணங்களாகப் பிரித்துவிடுவதில் தீவிர அக்கறையுடன் செயற்பட்டும் வருகின்றார் என்றும், இதற்கென விரைவிலேயே கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தவும் அவர் திட்டமிட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

டி. பி. விஜேதுங்காவின் நடவடிக்கை பற்றி கருத்து வெளியிட்ட பி. பி. ஸி செய்தியாளர், வடக்கையும், கிழக்கையும் தொடர்ந்து இணைத்து வைத்திருக்க வேண்டுமா என்பது குறித்த சர்ச்சைக்குரிய கருத்து வாக்கெடுப்பை நடத்த ஜனாதிபதி டி. பி விஜேதுங்க முயன்று வருகிறார். கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து பிரித்து அதன்மூலம் தற்போது தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள இரு மாகாணங்களை பிரித்துவிட அவர் விரும்புகிறார் எனக் குறிப்பிட்டது.

அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் தொடர்ந்து நடை... விஜேதுங்கா எடுத்துக்கூறி வருகிறார்.

கருத்தறியும் வாக்கெடுப்பு மிகக்குறுகிய காலத்தில்-ஒரு சில மாதங்களில் நடத்தப்பட முடியும் என அரசு நம்புகிறது.

எனினும் இவ் வாக்கெடுப்பு இனப்பிரச்சினையை தீர்க்காது மாறாக தமிழர்களினதும், தமிழ் பிரிவினைவாதிகளினதும் மனதை ஆத்திரமூட்டலாம் என்றும் அரசவட்டாரங்கள் கருதுகின்றன என பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

தமது பாரம்பரிய தாயகம் எனக்கூறும் பகுதியை பிளப்பது பெரும்பான்மை சிங்களவர் ஆதிக்கம் செலுத்தும் ஓர் அரசு தமக்கு எதிராக மேற்கொள்ளும் சதி என்றுகூட சில தமிழர்கள் கருதலாம் எனவும் பி. பி. ஸி குறிப்பிட்டது.

## வாக்காளர் பட்டியலில் 8லட்சம் போலிப் பெயர்கள்

(கொழும்பு)

இலங்கை முழுவதிலும் தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் சுமார் எட்டு லட்சம் பேர் போலி வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதிலேயே மேற்படி கருத்தை அவர் தெரிவித்தார். மக்கள் மிகவும் விழிப்பாக இருப்பதன் மூலம் இப்போலி வாக்குகள் பயன்படுத்தப்படுவதை முறியடிக்க முடியும் என்றும்

## நரோமா பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பலில் 15ஆம் திகதி செல்லும் பயணிகள் 12ஆம் திகதி யாழ் செயலகத்திற்கு வந்து தாம் பயணம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ். அர

## மண்ணெய் எடுத்துவர தொடர்ந்து கப்பல்கட்டணம்

(யாழ்ப்பாணம்)

கப்பல் கட்டணம் விலக்கிக் கொள்ளப்பட்ட போதிலும் மண்ணெண்ணெய் கொண்டு வருவதற்குச் செலுத்தப்பட வேண்டிய கப்பல் கட்டணத்தைச் செலுத்தவே வேண்டும் என அரசாங்க அதிபர் செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இந்த நிலை காரணமாக தொடர்ந்து பாவனையாளருக்கு விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு ரூபா இருபத்தி ஐந்து ஆக இருக்கும் எனவும் இதில் எந்த மாற்றமும் இல்லையென்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மார்ச்மாதம் முதல் அத்தியாவசியப் பொருள்களுக்கு அறவிடு செய்யும் கப்பல் கட்டணம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டமை குறிப் (6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் அதிரடித் தாக்கு; சிப்பாய் பலி; ஆயுதம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை மாவட்டம் கோமரம் கடவல சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து தடைகளை அகற்ற வந்த 7 சிறிலங்கா இராணுவத்தினர்மீது நேற்றுக்காலை 7.40மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதேவேளை கோமரம் கடவல சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்தும் மண்குளம் பாலத்தடி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்தும் பவள் சகிதம் முன்னேறி வந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.


இத் தாக்குதலின்போது புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை. இத் தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு;

- ரி-56-1 ரக துப்பாக்கி - 01
- ரி-56 மகசின் - 04
- ஐ. எம். ரவைகள் - 90
- சப்பாத்து - 01 சோடி
- ஜே. ஆர். குண்டு - 01
- ஏ. கே. ஹோல்சர் - 01
- தொப்பி - 01

## இரு போராளிகள் வீரச்சாவு

திருகோணமலை மாவட்டம் மூதூர் முட்டிச்சேனைப் பாலத்தடியில் கடந்த எட்டாம் திகதி காலை 11 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் சுந்தரேஸ்வரன் / முரளி (இராசதுரை மகேந்திரன் கற்குடா, மட்டக்களப்பு), வீரவேங்கை எழில்ச்செல்வன் / உமாக்காந் (கோபாலப்பிள்ளை கனகசிங்கம் முட்டிச்சேனை, மூதூர், திருகோணமலை) ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.





## விமான நடமாட்டம் அதிகரிப்பு

சிறிலங்கா விமானப் படை விமானங்கள் நேற்று பலாலி விமானத் தளத்திற்குப் பல தடவைகள் வந்து திரும்பிச்

களை பிரித்துவிட அவர் விரும்புகிறார் எனக் குறிப்பிட்டது.

அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் தொடர்ந்து நடைபெற்று வந்ததால் இக் கருத்தறியும் வாக்கெடுப்பு இதுவரை ஒத்திவைக்கப்பட்டு வந்தது: ஆனால் இத் தேர்தலை நடத்துவதே தமது விருப்பம் என ஜனாதிபதி

...போதுள்ள வாக்காளர் பட்டியலில் சுமார் எட்டு லட்சம் பேர் போலி வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர் என சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் பியசேன கமகே தெரிவித்துள்ளார்.

தென் மாகாண சபையின் தேர்தல் பிரசாரக் கூட்டத்...

மிகவும் விழிப்பாக இருப்பதன் மூலம் இப்போலி வாக்குகள் பயன்படுத்தப்படுவதை முறியடிக்க முடியும் என்றும் எனவே முழுமையாக மக்களே இது விடயமாக அவதானமாக இருக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# ஆளும் கட்சியை எதிர்ப்பவர்கள் ஒரே நாளில் மறைகின்றனர்

## சந்திரிகா குமாரணதுங்க கூறுகிறார்

(கொழும்பு)

ஆளும் கட்சியை எதிர்ப்பவர்கள் ஒரே நாளில் காணாமல் போவதாகவும், எனவே மக்கள் துணிந்து தமது கருத்தை தெரிவிக்க முடியாத நிலையில் இன்று இருப்பதாக மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

தென்மாகாணசபை தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் மேற்படி கருத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்கம் திட்டமிட்டு மனித உரிமைகளை மீறுவதாகவும் இந்த நிலையில் ஒரு ஜனநாயகத் தேர்தலை எப்படி மக்கள் எதிர்பார்க்க முடியும்? எனவும் கேள்வி எழுப்பினார்: மர்ம எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளில் ஸ்ரிலங்காவும் ஒன்று என்றும் இவர்கள் யார் என்ன நடந்தது என்பது கூட இன்னும் தெரியாமல் உள்ள விடயம் என்றும் குறிப்பிட்டார் அவர்.

தென்மாகாணசபைத் தேர்தல் இன்று மிகவும் முக்கியமான ஒன்றாகவும் ஆளும் கட்சிக்கும், எதிர்கட்சிகளுக்கும் இத்தேர்தல் முடிவுகள் பல முக்கிய முடிவுகளுக்காக தேவைப்படுகின்றது. நாம் தென்மாகாணசபை ஆட்சியை கைப்பற்றுவோம் இதில் எந்த பிரச்சினையும் எமக்கு இல்லை. தென்மாகாண மக்களை நாம் நம்புகின்றோம். ஆளும் கட்சியினரை மிகவும் மோசமான ஒரு தோல்வியை அடைய செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

இத்தேர்தலே அடுத்து நடக்க உள்ள பொதுத் தேர்தல் ஜனாதிபதி தேர்தல்களை தீர்மானிக்கும் என மேலும் அவர் கூறினார்

# சீன இராணுவ தளபாட களஞ்சியம் சிறிலங்காவில் அமைக்க முயற்சி

(கொழும்பு)

சிறிலங்காவில் இராணுவ ஆயுதக்களஞ்சியம் ஒன்று நிறுவுவது தொடர்பாக சிறிலங்காவிற்கும் சீன ஆயுத உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

சீனாவின் பிரபல ஆயுத தளபாட உற்பத்தி நிறுவனம் 'நொறின்கோ' நிறுவனத்திற்கும் ஸ்ரிலங்கா இராணுவ உயரதிகாரிகள், அரச உயர் அதிகாரிகள் ஆகியோரிடையே இப் பேச்சுகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுதம் விற்பனை செய்யும் முக்கிய சீன நிறுவனமாக நொறின்கோ உள்ளது: ஸ்ரிலங்காவிற்கு பெருமளவு ஆயுதங்களை நொறின்கோ நிறுவனமே விற்பனைசெய்து வருகிறது. தொடர்ந்தும் இதனிடமிருந்தே தமக்குத் தேவையான ஆயுதங்கள் அனைத்தையும் கொள்வனவுசெய்ய ஸ்ரிலங்கா பாதுகாப்பு அமைச்சு முடிவுசெய்துள்ளது.

நொறின்கோ நிறுவனமும் இது தொடர்பாக சிறிலங்கா அரசுக்கு தனது இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளது: இந் நிறுவனத்திடம் இருந்து ஒரேவகையான ஆயுதங்களை கொள்வனவு செய்வது படைத் தலைமையகங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

...த்திற்கு வந்து தாம் பயணம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

(தி, பா)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

...விமானங்கள் நேற்று பலாலி விமானத் தளத்திற்குப் பல தடவைகள் வந்து திரும்பிச் சென்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது மேலும் வலிவடக்குப் பகுதியில் ஏழாலை, கட்டுவன், குப்பிழான் பகுதியில் நேற்றுக் காலை முதல் இரவு வரை உலங்கு வானூர்திகள் பல தடவைகள் சுற்றிச் சுற்றி நோட்டமிட்ட வண்ணம் இருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை வலி மேற்குப் பகுதியைநோக்கிஎறிகணைத் தாக்குதல்கள் நேற்று நண்பகலில் நடாத்தப்பட்டன



2-ம் லெப். சுந்தரேஸ்வரன் (முரளி)



வீரவேங்கை எழில்ச் செல்வன் (உமாக்காந்)

# கனடாவில் அகதி அந்தஸ்து கோரிய 50 வீத விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(ரொரன்ரோ)

கனடாவில் அகதி நிலை கோருவோரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது மிகத் துரிதமாகக் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது கனடாவில் அமுல்செய்யப்பட்ட புதிய ஸி-86 எனும் குடிவரவுச் சட்டம் கடந்த ஆண்டு ஜனவரியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டபின்னர் 49 சதவீதமானோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் செயற்பாட்டைப் பொறுத்தவரை இதனைத் தயாரித்த அதிகாரிகள் தாம் நினைத்த விடயங்கள் நிறைவேறிவருவதாக திருப்தி தெரிவித்துள்ளனர்

கனடாவில் புகலிடம்கோருவோரின் அவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தொகையிலும் நிராகரிக்கப்படும் தொகையிலும் இலங்கையே முதலிடம் வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது நாடுகள்ரீதியாக இவ்வாண்டின் முதற்காலாண்டுப்பகுதியில் கனடாவில் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்படுபவர்களில் இலங்கையர் 849 பேரின் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளன இரண்டாவதாகச் சோமாலியர் 783பேர்ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர் ஈரானியர் 157 பேரும், கௌதமாலா அகதிகள் 94 பேரும், பெரு நாட்டு மக்கள் 90 பேரும், ரஷ்யர்கள் 84 பேரும் இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர்

மறுபுறத்தில் நிராகரிப்பு வீதத்தை எடுத்துக்கொண்டால் அங்கும் இவ்வாண்டின் முதல் காலாண்டில் 168 இலங்கைஅகதிகளின் விண்ணப்பங்கள் பூரண விசாரணையின் பின் நிராகரிக்கப்பட்டுள்ளன 1988-ம் ஆண்டு முதல் 1992-ம் ஆண்டு வரையான

(6ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறையால் வாக்குபெறமுயன்றால் சட்டமறுப்பு இயக்கம் நடக்கும்

## பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வன்முறைகள், ஒழுங்கீனமான முறையில் தென்மாகாண சபை தேர்தலில் வெற்றிபெற முயற்சி மேற்கொண்டால் தொடர்ந்து சட்டமறுப்பு மற்றும் அரசாங்க விரோத நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நடவடிக்கை தொடர்பாக பொதுஜன ஐக்கியமுன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரட்ன தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் எழுதியுள்ளார். தேர்தலை இயல்பு நிலையில் நடத்துவதற்கான சட்டவிதிகள் தேர்தல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட போதும் அவற்றை நடைமுறைப்படுத்தாது அவற்றைச் சட்டப்புத்தகங்களில் மட்டும் இருப்பதாக அக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கள்ள வாக்களிப்பில் ஈடுபடுவதற்கு சிலர் குழுக்களாக செயல்பட இருப்பதாகவும், வாக்காளர்களுக்கு அனுப்பப்படும் வாக்காளர் அட்டைகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

சுகலன் பிறவுன் HY-LINE BROWN பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'' சந்தை கிழக்குஒழுங்கை மானிப்பாய். (7687)

### மின்னொளியில் சைனீஸ் உணவு - சூப்

வைபவங்களுக்கான விசேட உணவுவகை- சூப்வகை, உங்கள் இல்லம் வரையிலான பரிமாறு சேவைக்கும் நாடுங்கள் சாகுனியா சைனீஸ் ஹோட்டல், இல. 166, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (7662)


### இருமிநாசினி அருந்தி தற்கொலை

(தென்மராட்சி)

இருமிநாசினி அருந்திய வயோதிபர் ஒருவர் மரணமானார்.

சுச்சாபி தெற்கு கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இ. தர்மலிங்கம் (70 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார். குடும்ப சச்சரவின் காரணமாக மதுபானத்துடன், கலந்து இருமி நாசினியை இவர் குடித்ததாகவும், உடனடியாக சாவகச்சேரி மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டாயினும் மரணத்தைத் தழுவிக் கொண்டாரெனவும் கூறப்படுகிறது. (86)

### சிவராத்திரி விழா

(தொல்புரம்)

சித்தன்கேணி ஸ்ரீ சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர்தேவஸ்தானத்தில் சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது. இன்று வியாழக்கிழமை மகா சிவராத்திரி விழாவில் இரவு நான்கு ஜாமங்களிலும்விசேட அபிசேகஆராதனைகளும் அதிகாலை பெருமான் வீதி உலா வந்து திருக்கேணியில் தீர்த்தோற்சவமும் சிறப்பாகநடைபெறவுள்ளது சிறப்பு நிகழ்வாக பண்ணிசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

❦ ❦ ❦

சுழிபுரம் மேற்கு அருள்மிகு ஐயனார் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை இரவு மகா சிவராத்திரி விழா நடைபெற...

இன அடக்குமுறைக்கு எதிராக

# தமிழ்ப்பெண்கள் ஏந்தியுள்ள ஆயுதம் பெண் அடக்குமுறையையும் நீக்கும்

**- கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை**

(வடமராட்சி கிழக்கு)

'தமிழ் ஈழப்பெண்கள் ஆயுதமேந்தி இன ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுவதினால், அவர்களது பெண் அடிமைத்தனத்திற்கு எதிரான குரலும் ஓங்கி ஒலிக்கின்றது.'

கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு சூசை, அனைத்துலகப் பெண்கள் தினத்தையொட்டி, வடமராட்சி கிழக்கிலுள்ள வத்திராயனில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.

இக்கூட்டம் கடற்புலிகளின் மகளிர் அணி உறுப்பினர் செல்வி அரசிலா தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கடற்புலிகளின் மகளிர் அணித்தளபதி செல்வி நளாயினி தேசியக் கொடியினையும், கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. விநாயகம் கடற்புலிகளின் கொடியினையும் ஏற்றி வைத்தார்.

கடற்புலிகளின் அரசியல் பயிற்சிக் கல்லூரி பொறுப்பாளர் திரு.மு.வே.யோ.வாஞ்சிநாதன் தீபம் ஏற்றி வைத்தார்.

இக்கூட்டத்தில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை தொடர்ந்து உரையாற்றும் போது, 10 வருடங்களுக்கு முன்னர் தமிழ்ஈழத்தில் பெண்கள் இருந்த நிலையில் இன்று பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. 1986-ம் ஆண்டு தமிழ் ஈழ யுவதிகள் ஆயுதமேந்திபோராட்டத்தில் அணிகள் இணைந்த போதும், 1992-ம் ஆண்டுதமிழ் ஈழப் பெண்கள் கடலில் இறங்கி நீச்சல் பழகவும், படகு ஓட்ட கற்ற போதும் இதனைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளுமா என ஐயம் ஏற்பட்டது.

இன்று கிளாலி கடனீரேரியில் பெண்கள் படகுகளில் சென்று பாதுகாப்பளிக்க மக்கள் பயணம் செய்வதனையும் எதிரியின் முகாம்கள் அமைந்துள்ள எல்லைகளில் பெண்கள் ஆயுதமேந்தி எதிரியின் வருகையை எதிர்பார்த்து, வழிமேல் விழி வைத்து காவல் புரிவதனையும் காணக்கூடியதாகவுள்ளது, தமிழ் ஈழப் பெண்கள் ஆயுதமேந்தி இன ஒடுக்கு முறைக்கு எதிராகவும் போராடுவதினால் அவர்களது பெண் அடிமைத்தனத்திற்கு எதிரான குரலும் இன்று ஓங்கி ஒலிக்கின்றது.

மதத் துறவிகளும், கல்விமான்களும் பேச்சுவார்த்தை பற்றியும், இன ஐக்கியம் பற்றியும் பேசும்போது சிறிலங்கா அரசு நாட்டு குறித்து வடபகுதி மீது பெரும் படையெடுப்புக்குத் தயாராகின்றது. வெளிநாடுகளிலிருந்து 500 கோடி ரூபா பெறுமதியான யுத்த தளபாடங்களை இறக்குமதி செய்கின்றது. இந்நிலையில் பேச்சுவார்த்தையும், யுத்த நிறுத்தமும், பத்திரிகைகளில் செய்தி வருவது போன்று எப்படிச் சாத்தியமாகும்?

எனவே மக்கள் இவைகளை நம்பி ஏமாறக் கூடாது; யுத்தத்தினால் மக்கள் படும் இன்னல்களை நாம் உணராதவர்களல்ல. எமது நேசக் கரத்தினை அரசு மீது நாம் நீட்டி நிற்பதினால்தான் யாழ்வரும் நல்லெண்ணக் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்.

கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்பட்டதாக அரசு அறிவித்துவிட்டு, அப்பாவித் தமிழ் மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் மூலம் கடலில் சுட்டுக் கொல்கின்றார்கள்; கடந்த மூன்று மாதங்களில் சுமார் 40 தமிழ் மீனவர்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்கள். கடற்படையினர் சுட்டுக் கொல்லவும், மீனவர்கள் மறுநாள் தொழிலுக்குச் செல்லவேண்டியுள்ளது. அவர்களின் வீடுகளில் அடுப்பு புகைக்க வேண்டுமானால், அவர்கள் தொழிலுக்குச் சென்றுதான் வேண்டும் இராணுவ நடவடிக்கை காரணமாக கரையோரத்தை அண்டிய பகுதிகளிலேயே ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பத்து அல்லது பதினைந்து அடி நீளமான குடிசைகளிலே தமது அன்றாட கருமங்களை ஆற்றி வருகின்றார்கள்.

1983-ம் ஆண்டு பல இளைஞர்களும், யுவதிகளும் எமது இயக்கத்தில் இணைய முன்வந்தார்கள்; அப்போது அவர்கள் அனைவரையும் உள்வாங்கும்நிலையில்எமது தொழில்நுட்பம்வளர்ந்திருக்கவில்லை. இப்போது எமது இயக்கம் தொழில் நுட்ப ரீதியாக வளர்ச்சியடைந்திருக்கின்றது எதிரியோடு போராடுவதற்கு போராளிகள் உருவாகவேண்டும்'' என்றார்

இக்கூட்டத்தில் கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. விநாயகம், கடற்புலிகளின் மகளிர் அணித்தளபதி செல்வி நளாயினி, கடற்புலிகளின் அரசியல் பயிற்சிக் கல்லூரி பொறுப்பாளர் திரு. மு.வே.யோ. வாஞ்சிநாதன் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

இறுதியில் கடற்புலிகளின் கடற்படைப் பயிற்சிக் கல்லூரி மாணவிகளின் வில்லுப் பாட்டு, மற்றும் கலை நிகழ்ச்சிகள் வடமராட்சி கோட்ட கலைபண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெற்றன.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கடற்புலிகளின் கடற்படைப் பயிற்சிக்கல்லூரி மாணவிகளின் அணிநடையும் இடம்பெற்றது. (36)


யாழ் பட்டப்படிப்புகள் கல்லூரி
வெளிவாரி மாணவர் ஒன்றியத்தின்
"தமிழ்த் தென்றல்"
சஞ்சிகை நிதிக்கான

**கலைவிழா**

யாழ். பல்கலைக்கழக
நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும்
ரூபவாஹினி புகழ்
காத்தவராயன் (நாடகம்)
இன்னிசை விருந்து
இடம்: இராமநாதன் கல்லூரி,



ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

**பதவி வெற்றிடம்**

பதவி: கணக்காளர் 104 / 08

சம்பளத்திட்டம்: 1005 - 1705 / 40×5 - 50×10

(அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)

வயதெல்லை: 25 - 50 வருடங்கள்

கல்வி மற்றும் தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 9-வது சம்பளத்திட்டத்தின் கணக்குப் பதிவாளர் / கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத்திட்டத்தின் கணக்குப் பதிவாளர்/கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.



## 7-வது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் கதிஸ்

நுணாவில் மேற்கைச் சேர்ந்த வாமதேவன்-செல்வராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கதிஸ் தனது ஏழாவது பிறந்தநாளை 10-03-94 (இன்று) அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை மலேசியாவிலிருக்கும் அப்பா, அம்மா கொழும்பிலிருக்கும் கஜன் அண்ணா, கரன் அண்ணா கபில் அண்ணா, அம்மம்மா மலேசியா சித்தப்பா, சித்தி, சிரியன் அண்ணா, வாகீசன் அண்ணா, தங்கை பாமினா இத்தாலி ராசு மாமா, மட்டுவில் சிவராசா மாமா குடும்பத்தினர், மீசாலை பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

- குடும்பத்தினர்

(சி-8807)



கமக்காரருக்கு ஒரு சமூகப் பாதுகாப்பு

## கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்

இவ் ஓய்வூதியத் திட்டம் கமக்காரருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் பெரும் பயனளிக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். தெற்கில் உள்ளவர்கள் இத் திட்டத்தின் பயன்பாட்டை உணர்ந்து பெருமளவில் இத்திட்டத்தில் இணைந்துள்ளார்கள். நமது கமக்காரர்கள் இத் திட்டத்தில் சேர அதிக ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் இத் திட்டத்தில் சேர்ந்து அதன் பயன்பாட்டை நுகர ஏன் தயங்க வேண்டும், ஏன் பின்னிற்க வேண்டும்? 18 வயதில் சேர்ந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை 150 ரூபா செலுத்தி இத் திட்டத்தில் சேரும் ஒருவர் 60 வயதின் பின் மாதம் 4000 ரூபாவிற்கும் மேற்பட்ட ஓய்வூதியத்தைப் பெற முடியும்18 வயதுமுதல் 59 வயது வரை இத் திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம். பணம் கட்டுபவர் இடையிலே மரணமெய்தினும் அவரின் குடும்பத்தினருக்கு ஒரு தொகைப் பணம்கிடைக்கும். அவர்60 வயதின் பின் உயிருடன் இருந்தால் இறக்கும் வரை ஓய்வூதியம் கிடைக்கும். ஏதேனும் ஒரு வயதில் உடலின் எந்த அங்கத்திலும் குறைபாடு அல்லது பாதிப்பு ஏற்படின் அவருக்கு நட்டஈடாக ஒரு தொகையும், இறக்கும் வரை ஓய்வூதியமும் கிடைக்கும். இத் திட்டத்தின் முழுப் பயன்பாட்டையும் நம் கமக்காரர்கள் உணர்ந்து இத் திட்டத்தில் விரைந்து சேர்ந்து கொண்டால் அவரும் அவருடைய குடும்பமும் வாழ்வின்இறுதிக் காலத்தில் துன்பப்பட வேண்டிய நிலை ஏற்படாது. இத் திட்டம் பற்றிய மேலதிக விபரங்களை அறிய விரும்பினால் செயலகத்திலும், கமநல சேவைத் திணைக்களத்திலும் தொடர்பு கொள்ளலாம். காலம் தாழ்த்தாமல் இத் திட்டத்தில் சேர்வது சகலருக்கும் நன்மைபயக்கும்.

கா. மாணிக்கவாசகர்
அரச அதிபர்,
யாழ்ப்பாணம்.

(சி-8810)


## நினைவு கூருகின்றோம்...

## 1994.03.10

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்- காங்கேசன்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால்...

சுழிபுரம் மேற்கு அருளம்பது ஐயனார் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை இரவு மகா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது. நான்கு ஜாமங்களிலும் பூசை ஆராதனைகளுடன் ஒவ்வொரு ஜாமப்பூசை நேரத்திலும் சிறப்பு சமய சொற்பொழிவுகளும், வில்லிசையும் இடம்பெறவுள்ளது.
(41)

## மகளிர் தினவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட - இந்து மகளிர் கல்லூரியில் அனைத்துலக மகளிர் தினவிழா அதிபர் திருமதி லோகநாயகி குமாரசாமி தலைமையில் நடைபெற்றது ''மகளிர் மகத்துவம்'' பற்றி ஆசிரியை செல்வி ச. சிவப்பிரகாசம் உரையாற்றினார் கல்லூரி மாணவிகளின் ''சீதனம் ஒழிந்ததா?'' நாடகமும் இடம் பெற்றது ''இன்றைய பெண்கள்'' பற்றிய வினாடி வினாப் போட்டியும் நடைபெற்றது
(25)

## நிர்வாகி தெரிவு

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேசசபை சுழிபுரம் உப அலுவலகத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் உப சமாஜத்திற்கான புதிய நிர்வாக உறுப்பினர் தேர்தல் பொதுக்கூட்டம் அண்மையில் அலுவலக மண்டபத்தில் பொறுப்பதிகாரி திரு. புலேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உபசமாஜத்தின் நடப்புவருட நிர்வாகத் தேர்வின் போது. தொல்புரம் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தை சேர்ந்த இ. உதயசூரியன் தலைவராகவும், சித்தன்கேணி நாமகள் ச. ச. நிலையத்தைச்சேர்ந்த த. விமலரூபன் செயலாளராகவும், மற்றும் மொத்தம் 18 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர். (41)

---

இன்னிசை விருந்து

இடம்: இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம்

காலம்: 10-03-94 வியாழக்கிழமை
இரவு 8.00 மணி

பிரவேசம்: ரூ. 20/-, ரூ. 10/-

விளம்பர அன்பளிப்பு:

### எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(இ-8804)

---

கலை ஊடக இணையத்தின்

## முக்கிய அறிவித்தல்

இரவு 10.00 மணிக்குமேல் வீடியோ படம் காண்பிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என்பது தெரிந்ததே. சிவராத்திரியை முன்னிட்டு இன்றைய தினம் மட்டும் (10.3.94) விடுதலைப் புலிகளின்கலை பண்பாட்டு கழகத்தின் தணிக்கை சபையினரால் தளர்த்தப்பட்டுள்ளது என்பதை தெரியப்படுத்துகின்றோம்.

-கலை ஊடக இணையம்

(இ-8805)

---

## பின்போடப்பட்டுள்ளது

வரெழு - சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை சிவராத்திரி தினத்தன்று நடாத்த இருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பின் போடப்பட்டுள்ளது.

அதிர்ஷ்டம் பார்க்கும் நாள் 14-04-1994
புதுவருடப்பிறப்பன்று மாலை 4.30 மணி

-மன்ற அதிபர்
சிவபூரணி முத்தமிழ் மன்ற
அறநெறிப் பாடசாலை.

(7695)

---

...டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத்திட்டத்தின் கணக்குப் பதிவாளர்/கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத்துறையிலான மேற்பார்வை மட்டத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலை பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்காய்வு துறையிலான மேற்பார்வை மட்டப் பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்;

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. உயர்தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் / எண்பார்வை மேற்பார்வை மட்டத்துறையில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்;

விண்ணப்பங்கள் யாவும் ''பொதுமுகாமையாளர் வலிகாமம் வடக்கு ... பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பி. எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு 31-3-94-ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்;

மேற்படி விண்ணப்பம் சகலரிடம் இருந்தும் கோரப்படுகின்றது. சங்க எல்லைப்பரப்பில் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர்
... ப. நோ. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம்.

(சி-8809)

---

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சிவநிதி கதிரவேலு

எமது வித்தியாசாலையின் முன்னாள் ஆசிரியரும் பதில்அதிபருமாயிருந்த 94-03-05-ல் சிவபதமடைந்த திருமதி சி. கதிரவேலு அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஆசிரியர் கழகம்
யா- கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை

(7698)

---

1984ஆம் ஆண்டு இந்த தினத்தில் யாழ்- காங்கேசன்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக்கொல்லப்பட்ட தட்டி ''வான்'' ஓட்டுனரான பருத்தித்துறை திக்கத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்-

1986ஆம் ஆண்டு மட்டு-கல்லடி, உப்போடைப் பகுதியிற் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

லெப். ரவிக்குமார் (நாகேஷ் யோகராசா -உப்போடை, கல்லடி - மட்டு)

அன்ரனி (உப்போடை, கல்லடி, மட்டு)

முல்லை-மாங்குளம் துணுக்காய், வேட்டையடைப்புப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். பெரியதம்பி (இலிங்கம் மதியழகன் சூசைப்பிள்ளையார்குளம் - வவுனியா)

கருணை (ஆறுமுகம் பாஸ்கரன் - நெடுங்கேணி ..., வவுனிக்குளம், மாங்குளம் - முல்லை)

மட்டு- உன்னிச்சைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் விவசாயி-நொச்சிமுனைப் பகுதியிற் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அம்பாறை-காரைதீவுப் பகுதியிற் தேசவிரோதக்குழுவினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

மகேஷ் (பாலகிருஷ்ணன் மகேஸ்வரன் -ஆர்.கே.எம் வீதி, காரைதீவு . அம்பாறை)

1989ஆம் ஆண்டு கிளி- வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

ரமேஷ் (பசுபதி மணிவண்ணன் - வட்டக்கச்சி- கிளிநொச்சி)

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் உழவுயந்திரத்தில் வந்து கொண்டிருந்தபோது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழர்கள்

1991ஆம் ஆண்டு வவுனியா-தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

பிறேம் (சிவலிங்கம் உதயகுமார் - சின்னக்குளம் .வவுனியா)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கூலித் தொழிலாளியான தளவாயைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1993ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக சாவைத் தழுவிய-

லெப். அற்புதன் (பரமசிவம் பரமேஸ்வரன்- வேரோதநகர் -திருமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-8802)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# பேராதனைப் பல்கலைக்கழக புதிய மாணவர் மீது துன்புறுத்தல்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குப் புதிதாக அனுமதி பெற்றிருக்கும் மாணவர்கள் 'ராகிங்' என்ற பெயரில் மிக மோசமான முறையில் துன்புறுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் சிரேஷ்ட மாணவர்கள் சிலர் விடுமுறையில் யாழ். வந்து தங்கியுள்ளதாகவும் இவர்களே இப்புதிய மாணவர்களை உடல், உளரீதியாக மிகவும் மோசமான பாதிப்பு ஏற்படும் வகையில் துன்புறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான 'ராக்கிங்' தொடர்பாக யாருக்காவது முறைப்பாடு செய்தால் பேராதனையில் வைத்து தாக்கப்படுவார்கள் என சிரேஷ்ட மாணவர்கள் அச்சுறுத்தியுள்ளதால் இவர்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர்.

இதனால் தமது பிள்ளைகளை பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்புவதா? இல்லையா? என்பது குறித்துமுடிவுசெய்ய இயலாத நிலையில் பெற்றோர் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## தவக்கால போட்டி விண்ணப்பம் கோரல்

(நல்லூர்)

யாழ் சென்றோக்ஸ் இளைய தலைமுறைக் கழகம் தவக்காலச் சிந்தனைகளைச் சித்திரிக்கும் கலைப் போட்டிகளை நடாத்த உள்ளது.

இதற்கான விண்ணப்பம் இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பசான் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி பொதுஅறிவுப் போட்டி, கவிதைப்போட்டி, சிறுகதைப்போட்டி, ஓவியப்போட்டி, நாடகப் போட்டி ஆகியவைகளையே அது நடத்த உள்ளது. போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கூடன் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இதன் தலைவர் இ. கொலின் தெரிவித்துள்ளார். (17)

## மெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டிநாளை மறுதினம் சனிக்கிழமை இணுவில் கந்தசுவாமி கோவிலடியிலுள்ள மகாஜனாக் கல்லூரி புதிய மைதானத்தில் இடம்பெறும். அதிபர் திரு. க. நாகராசா தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் யாழ். வலயம் இரண்டு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தம் பிரதம விருந்தினராகவும், சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. கி. விக்னேஸ்வரன், விடுதலைப் புலிகள் அரசியற்துறை உறுப்பினர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (09)(11)

## பாடசாலை சமய செயற்பாடு திருப்திகரமாக இல்லை

### நிறுவனங்கள் கூறுகின்றன

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் சமய பாடமும் அதோடு தொடர்புடைய நிகழ்வுகளும் திருப்திகரமாக இல்லை என நிறுவனங்கள் வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்குச் சுட்டிக் காட்டியுள்ளன. சமய பாடத்தில் பயிற்சியும் அனுபவமும் இல்லாத ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுவதாகவும் அந்த நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து, எந்தச் சமயமும் அந்தச் சமயத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக்கொண்டே கற்பிப்பது பொருத்தமானதாகும் என்றும், அதேசமயம் ஒவ்வொரு பாடமும் போல் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் விசேட பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்றும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் பணித்துள்ளது.

## விளக்கமறியல்கைதிகள்மீது பொலிசார் கொடூரம்

(கொழும்பு)

மொரவக்கவில் அநுரா உரையாற்றிய கூட்டத்தில் கூச்சலிட்டுக் குழப்பம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின்பேரில்கைதுசெய்யப்பட்ட ஐவரும் பொலிசாரினால் கொடூரமானமுறையில் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஐவரும் பின்னர் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் இவ்வாறு தாக்கப்பட்டது தவறானது மனித உரிமை மீறல் நடவடிக்கை எனக் குறிப்பிட்ட இவ் ஐவரின் சட்டத்தரணி அப்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீது அடுத்தவாரம் மனித உரிமைமீறல் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நடனம், சங்கீதம்

## ஆசிரியர் தேர்வு பரீட்சை மார்ச் 20இல் நடக்கும்

நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் தேர்வு போட்டிப்பரீட்சைஇம் மாதம் இருபதாம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற இருப்பதாக பரீட்சைத் திணைக்கள உயர்அதிகாரி ஒருவர் 'தினமின' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இப்போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தற்போது தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், கிடைக்காதவர்கள் உடனடியாக பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## நயினாதீவில் கடற்படை தாக்குவது அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் இறிலங்கா கடற்படையினரின் அப்பாவிப் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாக தெரியவருகின்றது. முகாமில் இருந்து ஊர்மனைக்குள் ரோந்து செல்லும் கடற்படையினர் வழியில் எதிர்ப்படும் இளைஞர்கள், குடும்பஸ்தர்கள் என அனைத்து தரப்பினரையும் பிடித்து நையப்புடைப்பதோடு சைக்கிளில் வருவோரிடமிருந்து சைக்கிளையும் பறித்துச் சென்று விடுகின்றனராம். அத்துடன் அண்மையில் படையினரின் அனுமதி பெற்று மீன்பிடித்த சில மீனவர்களை முகாமிற்கு அழைப்பித்து கடுமையாக தாக்கியுள்ளனராம். நயினாதீவிற்கும் ஏனைய தீவகப் பகுதிகளுக்கும் சேவையில் ஈடுபடும் பயணிகள் படகுகளின் உரிமையாளர்கள் ஒரு சிலரும் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (22)

## மண்டைதீவு ம.வி. விரைவில் தனியிடத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆரியகுளம் சந்தி புதிய உளர் கலைக் கல்லூரியில் இயங்கிவரும் மண்டைதீவு மகாவித்தியாலயம் விரைவில் தனக்கென ஒரு தனி இடத்தில் இயங்கவுள்ளது. இதற்கென இப்பகுதியில் விடுதலைப் புலிகளின் தீவகக் கோட்ட அரசியல் துறையினர், மாணவர் அமைப்பினரால் சுமார் பத்துப் பரப்புக் காணியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாகவும், மிக விரைவில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வித்தியாலயம் தனியாக இயங்கப் போவதாகவும், தளபாடப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய பொதுஸ்தாபனங்களின் உதவி எதிர்பார்க்கப்படுவதாகவும் வித்தியாலய அதிபர் திரு. சை. பேரின்பநாயகம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். (22)

## பிந்திக்கிடைத்தஅழைப்பால் அதிகாரிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு மு. ப. 10 மணிக்கே வழங்கப்பட்டதாக தெரியவருகிறது.

கூட்ட அறிவுறுத்தல் கடிதம் உரிய காலத்தில் வழங்கப்படாததால் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் சிலரும், உத்தியோகத்தர்களும் தமது வழமையான கடமைகளை உடனடியாகப் பின்போடவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. கூட்டம் யாழ். அரச அதிபர் தலைமையில் அவர் அலுவலகத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## றுகுணு நாளை புறப்படும்

யாழ் மாவட்டத்திற்கான பொருட்களை ஏற்றிக்கொண்டு றுகுணு கப்பல் வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து பருத்தித்துறையை நோக்கி புறப்படும் என யாழ் அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதில் என்னென்ன பொருட்கள் ஏற்றிவரப்படவுள்ளன என்ற விபரங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. (ச.பா)

## பளை கொத்தணிக்கு இலவச பாடப் புத்தகங்கள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளைக் கொத்தணிப் பாடசாலைகளுக்கு யாழ். கல்வித் திணைக்களம் இலவசப் பாடநூல்களை விநியோகிக்கவுள்ளது.

தற்சமயம் நிலவிவருகின்ற போக்குவரத்துப் பிரச்சினைகளினால் பளைக் கொத்தணிப் பாடசாலைகள் யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்துள்ளமையினால் மேற்படி நடவடிக்கையை யாழ். கல்வித்திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

தற்சமயம் யாழ். மாவட்டத்திற்கென எடுத்துவரப்பட்ட இலவசப் பாடப்புத்தகங்கள் பற்றாக்குறையாகவுள்ளதாகவும் இதனை அடுத்து மற்றுமொரு தொகுதி புத்தகங்களைக் கொழும்பில் இருந்து எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## இன்றைய நிகழ்வுகள்

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் அனைத்துலக மகளிர் தினம் இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது. காலை எட்டு மணியளவில் ஆரம்பமாகும் இவ்விழாவிற்கு சாவகச்சேரி பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் முதன்மை விருந்தினராகவும், வைத்திய கலாநிதி திருமதி வீ. எம். கருணாகரன் பிற்பகல் விழாவுக்கான முதன்மை விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். காலை நிகழ்வில் விவாதஅரங்கமும், பிற்பகலில் ஆற்றலால் உயர்ந்த மகளிருக்கு பாராட்டுகளுடன், மாணவர்களுக்கு பரிசு வழங்கலும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது.

ஃ ஃ

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய சைவ சமய விருத்திக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டுவிழாவும், சிவராத்திரி விழாவும் இன்று நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிகளில் விசேடபூசை, அபிசேகங்களுடன், சமய அறிவுப்பரீட்சை, செயல்முறைப் போட்டி, மங்கள இசைக் கச்சேரி, சிறப்புச் சொற்பொழிவு, இன்னிசைக் கச்சேரி, பாட்டுக் கச்சேரி என்பனவும் இடம்பெறவுள்ளன.

ஃ ஃ

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் விஞ்ஞான தின நிகழ்வும், 'சங்கேதம்' மலர் வெளியீடும் இன்று முற்பகல் ஒன்பது மணியளவில் நடைபெறவுள்ளது. கணிதத்துறை பேராசிரியர் வே. தர்மரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

ஃ ஃ

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் கொடிவார ஆர

ஃ ஃ

யாழ்ப்பாண மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா இன்று யாழ் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இருக்கும் யாழ் மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில் நடைபெறவுள்ளது. காலை எட்டு மணி முதல் பன்னிரண்டு வரை இதை முன்னிட்டு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

மாணவர்களுக்கான ஆசிய ஓவிய மற்றும் புகைப்படக் கண்காட்சி இன்று காலை ஒன்பது மணியளவில் கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவராசாவும், சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் அருளானந்தமும், உதவிக் கல்விப் பணிப்பாளர் (சித்திரம்) சிவசுப்பிரமணியமும் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ

திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நிலைய அரங்கில் மகா சிவராத்திரி இரவுக் கொண்டாடப்படவுள்ளது. இதில் சிறுவர்களின் நடனமும், நாடகங்களும், இன்னிசை நிகழ்ச்சியும் நடத்தப்படவுள்ளது.

ஃ ஃ

சித்தன்கேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் மகா சிவராத்திரி விழா இன்று நடைபெறவுள்ளது. விசேட அபிஷேக ஆராதனைகளுடன், பண்ணிசைக் கச்சேரி, சிறப்புச் சொற்பொழிவு என்பனவும் இடம்பெறவுள்ளன.

## நாளைய நிகழ்வுகள்

யாழ் இந்து மைதான சந்

## யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் விதிகள்

## யாழ். மருத்துவ மனையில்

# மெய்வல்லுநர் விதிகள் கருத்தரங்கு தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான - மெய்வல்லுநர் விதிகள் பற்றிய - கருத்தரங்குத் தொடரின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் 'போஸ்கோ' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். கல்வித்திணைக்களம், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் ஆகியன இணைந்து இந்தக் கருத்தரங்குத் தொடரை ஒழுங்கு செய்துள்ளன.

சங்கத்தலைவர் டாக்டர் ரி. டபிள்யூ ஜெயகுலராஜா தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பங்குபற்றவுள்ளார்.

யாழ். கல்வி வலயம் 1 இற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, கல்வி வலயம் II இற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் திரு. க. சந்தசாமி, யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் 'போஸ்கோ' நிறுவனத்தின் உரிமையாளர் திரு. எம். எஸ். சந்திரபோஸ் மங்கல விளக்கேற்ற, சங்கத்தின் உப தலைவர் திரு. ரி. கே. வில்வராஜா வரவேற்பு மற்றும் அறிமுக உரைகளை நிகழ்த்துவார்.

தொடர்ந்து ஆறு வாரங்களுக்கு சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் நண்பகல் 1-00 மணிவரை இந்தக் கருத்தரங்குத் தொடர் நடைபெறும்.

## பெரும் நிதி நெருக்கடியில் யா. மருத்துவமனை சிக்கியது

(யாழ்ப்பாணம்)

கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு போதிய நிதி இன்மையால் யாழ். போதனா வைத்தியசாலை பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கிறது.

இதனைச் சீர்செய்வதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க இலாகா பிரிவொன்றிலிருந்து கடன் அடிப்படையில் நிதியைப் பெறுவதற்கு யாழ். போதனா வைத்தியசாலை முயற்சி மேற்கொண்டுள்ளது.

அண்மைக்காலமாக இவ் வைத்தியசாலைக்கு தேவையான நிதி அரசாங்கத்தால் வழங்கப்படாமையே இந் நிதி நெருக்கடிக்கு காரணமெனக் கூறப்படுகின்றது. அரசாங்க நிதி கிடைத்தால் மட்டுமே இந்த நிதியை மீளவும் வழங்க முடியும் என்றும் தெரிய வருகின்றது. (நி)

## போட்டியில் வென்றவருக்கு பரிசு வழங்கப் படவுள்ளது

(பருத்தித்துறை)

இலங்கை சைவ மன்றம் மாணவர்களின் சமய அறிவை மேம்படுத்தும் முகமாக உயர் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கிடையே நடாத்திய சமய பொது அறிவுப் போட்டியின் (முதலாம் பரிசு தங்கப் பதக்கம்) பரிசளிப்புவிழா எதிர்வரும் 14ஆம் திகதி (வட. இந்து மகளிர் கல்லூரியில் இலங்கை சைவமன்றத் தலைவர் பேராசிரியர் திரு க. கணேசலிங்கம் தலைமையில் நடாத்துகின்றனர். இவ்விழாவில் யாழ். மாவட்ட சமூக சேவை சிரேஷ்ட உதவி ஆணையாளரும் பருத்தித்துறை பிரதேச செயலருமான திரு. ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். விசேட விருந்தினராக பருத்தித்துறை பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினமும் சிறப்பு விருந்தினராக விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக யாழ் மாவட்ட பொறுப்பாளர் திரு. அன்பரசனும் கலந்து கொள்கின்றனர். தமிழீழ காவல்துறை பருத்தித்துறை பொறுப்பதிகாரி திரு. செ. முகுந்தன், சட்டத்தரணி திரு. ச. இரவீந்திரன், வைத்தியகலாநிதி மு. க. முருகானந்தன், இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. செல்லத்துரை, தொழிலதிபர்களான திரு. அ. நாகரத்தினம், திரு. ச. காந்திதாசன், அதிபர்களான திருமதி இ. நந்தகுமார், திருமதி லோ. குமாரசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன என்று இலங்கை சைவமன்றம் அறிவித்துள்ளது. (25)

## யாழ். மருத்துவ மனையில் காகிதாதிக்கும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பதிவு புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதன் காரணமாக கொழும்பு வைத்திய சாலை யொன்றின் பிறப்பு பதிவு புத்தகம் பாவிக்கப்படுகிறது.

வெளிநோயாளர்களை விடுதிக்கு அனுமதிப்பதற்கு பதிவு செய்யும் இப் புத்தகம் முடிவடைந்துள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து கொழும்பு த சொய்சா மகளிர் வைத்திய சாலையின் குழந்தைகள் பிறப்பு பதிவு செய்யும் புத்தகம் எடுத்துவரப்பட்டு அதில் இப் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இதேபோல ஏனைய காகிதாதிகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## மீனவர் சடலங்கள் நேற்று முன்தினம் மீட்பு

(வடமராட்சி)

நாகர்கோயில் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மீனவர்கள் இருவரின் சடலம் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டது.

இக்கடற்பரப்பில் நேற்று முன்தினம் காலை சுட்டுக்கொல்லப் பட்ட மீனவர்கள் மூவரில் ஜெயா என்பவரதும் சிவா என்பவரதும் சடலங்களே மீட்கப்பட்டன. சூட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் இரண்டு சடலங்களும் மீட்கப்பட்டன. சிவா என்பவரது சடலம் மீனுக்கு விரித்த வலைக்குள் சிக்குண்டிருந்தது. (வே)

## கோழி வளர்ப்பு ஊக்குவிக்க பொரு. நிறு. நடவடிக்கை

கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் முகமாகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து முகமாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது

இவ்வகையில் நுணாவில் கிழக்கு கிராமிய உற்பத்திக் குழுப்பகுதியில் குடும்பம் ஒன்றுக்குதலா 25 கோழிக்குஞ்சுகளும் தீவனமும் ஐந்து குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இயக்கச்சி பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 15 குடும்பங்களுக்கு தலா 2500 ரூபா வீதம் மொத்தம் 37,500 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

---

### தாக்குதல்

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கிளாலிக்கடல் பரப்பில் நின்ற மீனவர்கள் மீது கலிபர் தாக்குதலை நடத்தியது எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

கிளாலி அல்லிப்பளைப் பகுதியில் உலங்குவானூர்தி கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக கண்மூடித்தனமான தாக்குதலை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (86)

ராகக் கலந்து கொள்கிறார்.

ஃ ஃ

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் கொடிவார ஆரம்பவிழா இன்று கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

(குருநகர்)

யாழ் மறை மாவட்டத் திருச்சபையினர் நடாத்தும் மேய்ப்புப் பணி மாநாட்டை ஒட்டி யாழ் திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெற இருக்கும் 'கலை கலாசாரம்' பற்றிய கலந்துரையாடலின் 2-ம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும். (21)

ஃ ஃ

(குருநகர்)

நவாலி தெற்கு அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று இரவு மகா சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்பட இருக்கிறது.

விரத சிறப்பு நிகழ்ச்சிகளாக நான்கு சாமப் பூசைகளும், விசேட அபிசேக ஆராதனைகளும், பஜனைகளும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

ஃ ஃ

(குருநகர்)

நவாலி தெற்கு அந்திரான் முருகானந்த சனசமூக நிலையம் தாங்கமகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று சமய - பொது அறிவுப்போட்டிகள் வழமை போல் நடாத்தப்பட இருக்கிறது.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற் பிரிவு என நான்கு பிரிவுகளாக இருபோட்டிகளும் நடாத்தப்படும்.

பரிசில்கள் சிவராத்திரி தினத்தன்றே வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (21)

ஃ ஃ

பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரனின் மூலவேர் நூல் அறிமுக விழாவும், புதுப்புனல் நாடகமும் இன்று பிற்பகல் ஏழு மணியளவில் திருமறைக் கலாமன்ற கலையரங்கில் நடைபெறவுள்ளது.

## நாளைய நிகழ்வுகள்

யாழ் இந்து மைதான சந்தியில் அமைந்துள்ள மெய்கண்டதேவர் ஆதீனத்தில் நாளை கோச்செங்கட்சோழ நாயனார் குருபூசையும், குருஞான சம்பந்தர் நினைவுப் பேருரையும் இடம்பெறவுள்ளது.

ஃ ஃ

யாழ்ப்பாண அரசாங்கத் தொடர்பு அலுவலர் சிக்கன சேமிப்பு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ் செயலக ஆலோசனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுகள் அன்றைய தினத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

### வீதி விபத்தில் காயமடைந்தார்

(குருநகர்)

சண்டிலிப்பாய் மாசியப்பிட்டி வீதியில் நேற்று முன்தினம் காலையில் நடைபெற்ற மோட்டார்சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் வந்தவர் காயமடைந்தார்

காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த சின்னராசா ரவீந்திரராசா என்பவர் மயக்கமடைந்த நிலையில் சண்டிலிப்பாய் உபதபால் பணிமனையில் முதலுதவிச் சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (21)

# ஜெயலலிதாவின் டில்லி விஜயம் திருப்திகரமானதாக அமையவில்லை

## முதல்வரின் குற்றச்சாட்டை பிரதமர் கவனத்திற் கொள்ளவில்லை

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் டெல்லி விஜயம் திருப்திகரமாக அமையவில்லை என்றும், தமிழக அரசின் செயற்பாடுகள் குறித்து டில்லி திருப்தி கொண்டிருக்கவில்லை என்றும் தமிழ்ப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

பரபரப்பான சூழலில் டெல்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டிற்கு போய்த் திரும்பிய தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி கூட்டப்பட்ட இந்த மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பியதில் இரண்டு விடயங்கள் கவனிக்கப்படவேண்டியவையாக உள்ளன.

டெல்லி போய் இறங்கியதும் தமிழ் நாடு கவுன்சிலில் காத்திருந்த தமது கட்சி எம்பிக்களிடம் சிறிது நேரம் ஜெயலலிதா உரையாற்றினார். அப்போது "வரப்போகும் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் நாங்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும்?" என்று எம்பிக்கள் கேட்டபோது,

தமிழக சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வருகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் மத்திய அரசு நினைத்தால் இந்த சமயத்தில் தமிழக அரசுக்கு ஏதாவது இடைஞ்சல் செய்ய முடியும் ஆகவே எதிர்ப்பு தெரிவிக்கவேண்டிய விடயங்களுக்கு நீங்கள் எதிர்ப்பு தெரிவிக்க தயங்கத் தேவையில்லை என்றார்.

எதற்கெடுத்தாலும் ஓடிப்போய் காங்கிரஸ் காரர்களை ஆதரிக்க இப்போது நமக்கு ஒரு காரணமும் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

டெல்லி விஜயத்தின்போது முதல்வர் மாநாடு தவிர முக்கியமாக பேசப்பட்ட இன்னொரு விடயம் மத்திய உள்துறை செயலர் வோராவுடன் ஜெயலலிதா நடத்திய பேச்சு ஆகும். சுமார் ஒரு மணிநேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது. இச்சந்திப்பு முடிந்து வெளியே வந்த ஜெயலலிதா எரிச்சலுடன் காணப்பட்டார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்திப்பின்போது தமிழகத்தில் பாதுகாப்பு நிலவரங்கள் பற்றி கேள்விமேல் கேள்வி கேட்டு முதலமைச்சரை துளைத்தெடுத்து விட்டாராம் வோரா.

எல்.ரி.ரி.ஈ விடயத்தில் தமிழக அரசு மெத்தனமாக உள்ளது என்று மத்திய உள்துறைக்குத் தகவல் வந்திருப்பதாகவும் அவர் ஜெயலலிதாவிடம் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை செயலர் முதலமைச்சர் ஜெயலலிதாவை இவ்வாறு துளைத்தெடுத்தமைக்கு சமீபத்தில் மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட்டும் அவருடன் சென்னை வந்து திரும்பிய உள்துறை அதிகாரிகளும் சென்னைராஜ்பவனில் நடத்திய முக்கிய இரு மினி கூட்டங்கள் தான் உதவின எனவும் ராஜ்பவன் அதிகாரிகளிடமிருந்து நிறைய தகவல்களை அவர்கள் சேகரித்துக்கொண்டனர் எனவும், ஜெயலலிதாவிடம் மத்திய உள்துறைச் செயலர் அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்டதற்கு இந்தத் தகவல்களும் உதவியாக இருந்திருக்கலாம் என சொல்லப்படுகிறது.

மொத்தத்தில் தமிழக அரசின் செயல்பாடுகள் மீது மத்திய அரசு திருப்திகரமாக இல்லை என்பதை இந்த டெல்லி விஜயத்தின் போது முதல்வர் உணர்ந்து கொண்டார்.

இந்த விஜயத்தின் போது பிரதமருடன் அவர் நடாத்திய சந்திப்பும் திருப்திகரமாக அமையவில்லை. ஆளுநர் சென்னா ரெட்டி பற்றி ஜெயலலிதா புகார் கூற முற்பட்ட போது எனது உடல் நலம் சரியில்லை என்று சொல்லி அந்த விடயத்தையும் மேற்கொண்டு வளரவிடாது பிரதமர் தடுத்துவிட்டாராம்.

எது எப்படியோ பிரதமருடன் நாற்பது நிமிட நேரச் சந்திப்பு என்ற ஆர்ப்பாட்ட அறிக்கைகளுடன் சென்னைக்கு திரும்பி விட்டார் ஜெயலலிதா. சென்னை விமான நிலையத்தில் அவர் வந்திறங்கிய அதேசமயம் அ.தி.மு.க. தலைமை அலுவலக வாசலில் பட்டாசுகள் வெடித்து டெல்லியில் முக்கியமான ஏதோ நடந்து விட்டது போன்ற பிரமை உருவாக்கப்பட்டது.

அதேசமயம் ஜெயலலிதா டெல்லிக்குப்போய் திரும்பட்டும் என்றே காத்திருந்தாற் போல் ராஜ்பவனிலிருந்து ஒரு வெடிகுண்டு அறிக்கை மத்திய உள்துறைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. தமிழகத்தில் பயங்கரவாதம் அதிகரிக்கிறது என்றகோணத்தில் அமைந்திருக்கும் விரிவான அறிக்கையே அது என செய்திகள் தெரிவிக்கின்றன.

# ரயில் விபத்தில் 40 பேர் பலி

(ஜொகனாஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் நடைபெற்றரயில் விபத்தில் 40 பேர் கொல்லப்பட்டனர் 100 பேர் காயமடைந்தனர். இந்த ரயில் வெள்ளையரல்லாதோரே பயணம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# பிரான்சுடன் உடன்பாடு

(டில்லி)

இந்தியாவில் உருவாக்கப்பட்டு வரும் இன்சாட் இரண்டு 'சி', இன்சாட் இரண்டு 'டி' ஆகியவற்றை விண்ணில் செலுத்துவதற்கு பிரான்சின் விண்வெளி நிறுவனமான ஏரியான் ஸ்பேஸ் நிறுவனத்துடன் உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்சாட் இரண்டு சி 1995ன் இறுதியிலும், இன்சாட் இரண்டு டி 1996ன் இறுதியிலும் விண்ணுக்கு ஏவப்பட இருப்பது தெரிந்ததே.

காஸா, ஜெரிக்கோ பகுதியில்

# படையினர் ஏப்ரல் 13க்கு முன் மீளப் பெறப்பட்டுவிடுவர்

## இஸ்ரேலிய தூதுவர் தெரிவிப்பு

(டூனிஸ்)

ஜெரிக்கோ நகரம், மற்றும் காஸாப் பகுதியிலிருந்து ஏப்ரல் 13-ம் திகதிக்கு முன்பாக இஸ்ரேலியத் துருப்பினரை மீளப் பெறுவதற்கு இஸ்ரேலிய அரசு தயாராக இருப்பதாக அந்த நாட்டின் தூதுவர் பாலத்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்திடம் தெரிவித்து இருக்கிறார். இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபீனின் அரசியல் ஆலோசகரான யக்கீல் நரியாஸ் தூதுவர் ஆவார். கடந்த திங்கட்கிழமையன்று யாசீர் அரபாத்தை சந்தித்த அவர், ஹெப்ரோன் மசூதி படுகொலையை அடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ள இஸ்ரேலிய - பாலத்தீன சமாதான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு வசதியாகவே இஸ்ரேலிய அரசின் இந்த வாக்குறுதியை வழங்கியதாக கூறப்படுகிறது.

# காஷ்மீரில் துருப்புக்களை இந்தியா குறைக்கட்டும்

## - பாக். கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

காஷ்மீரின் நெருக்கடி தொடர்பாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான சர்ச்சை தீர்க்கப்படுவதில் காஷ்மீரில் இந்தியா தனது படைகளைக் குறைப்பது முதற்படியாக விளங்கும் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

காஷ்மீரில் ஆறு லட்சம் இந்தியத் துருப்புக்கள் இருப்பதாக மதிப்பிடப்படுவதாக தெரிவித்த பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் மேலும் குறிப்பிடுகையில் இத் துருப்புக்களின் எண்ணிக்கையை கணிசமான அளவில் குறைப்பது சர்ச்சை தீர்க்கப்படுவதற்கான முதற்படியாக விளங்கும் எனவும் குறிப்பிட்டார்.

# 6 மணிநேரம் கடும் குளிரில் வெளியில் கிடந்த குழந்தை

(டொரன்ரோ)

கனடாவை சேர்ந்த கார்ளி கொசோலேவ்ஸ்கி என்றஇரண்டு வயது குழந்தை ஆறு மணிநேரம்வீட்டிற்குவெளியே கடுங்குளிரில்உயிருடன் இருந்து வைத்திய வரலாற்றில் சாதனை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் குழந்தைக்கு என்ன நிரந்தரப் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றனஎன்பதை இப்போதே கூறமுடியாது. என டாக்டர்கள் தெரிவித்தனர். குளிருக்குள் இருந்தமையால் குழந்தையின் வெப்பநிலை பயங்கரமாக குறைந்திருந்ததுஎனினும் குழந்தையின் இடதுகால் பாதிப்படைந்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

# காஷ்மீர் பற்றிய தீர்மானம் இந்தியா ஏற்றுகொள்ளாது

## பரூக் அப்துல்லா

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு உண்மை அறியும்குழுவை அனுப்ப வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைக் கமிசனில் கோரவிருந்த தனது எண்ணத்தை பாகிஸ்தான் கைவிட்டுவிட்டது.

எனினும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மனித உரிமைகள் பேணப்படுவதை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் வற்புறுத்தியிருக்கிறது.

இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியான காஷ்மீரின் எந்த ஒரு அம்சம் பற்றிய எந்தவொரு தீர்மானத்தையும் இந்தியா ஏற்காது என்று இந்தியப் பிரதிநிதிகள் சார்பாகப் பேசிய காஷ்மீரின் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை ஐ.நா. மனித உரிமைக் கமிசன் முன்வரும் இப்பிரேரணை தொடர்பான வாக்களிப்பில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ஐரோப்பிய சமூக நாடுகள் கூறியுள்ளன.

# இந்தியாவும் பாகிஸ்தானும் பேசித்தீர்த்து கொள்ளட்டும்

# மசூதிப் படுகொலை பற்றி இஸ்ரேலிய அரசு விசாரணை

(டெல் அவிவ்)

ஹெப்ரோன் மசூதிப் படுகொலை தொடர்பாக இஸ்ரேலிய அரசு உத்தியோகபூர்வ விசாரணைகளைத் தொடக்கியுள்ளது. இப் பகுதியில் கடமையாற்றிய இராணுவப் பொறுப்பதிகாரி, அதிகாரி உட்பட நான்கு இராணுவ அதிகாரிகள் சாட்சியமளித்துள்ளனர். சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இப் படுகொலை இடம்பெற்றது தெரிந்ததே. இராணுவ அதிகாரிகள் கவனயீனமாக நடந்தமையும், இராணுவத்தினரில் சிலரின் பொறுப்பற்ற செய்கைகளும் இச் சம்பவம் இடம்பெற்றமைக்கு காரணமாக இருக்குமென கூறப்படுகின்றது.

கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவத்தினரில் சிலர் தமது கடமையை ஆற்றத் தவறியமை இச் சம்பவத்திற்கு இடமளித்ததாகவும், பாதுகாப்பு ஏற்பாடுகளில் கவனக்குறைவு இருந்ததாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக யூதத் தீவிரவாதிகளின் நடத்தை தொடர்பாக படையினர் கவனத்திற் கொள்ளவில்லை எனவும் கூறப்படுகிறது.

# ஜாதகத்திலேயே எனக்கு கண்ணீர் ராசி உண்டு

# இந்திய வரவு செலவுத்திட்டம் பாதுகாப்பிற்கு 23,000 கோடி ரூபா

(டில்லி)

இந்தியாவின் 1994--95 ஆம் ஆண்டு பட்ஜட்டில் பாதுகாப்புச்செலவாக 23,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைவிட இது 3820 கோடி ரூபா அதிகமாகும் சுங்கவரி 85 சதவிகிதத்திலிருந்து 65 சதவிகிதமாகக்குறைக்கப்பட்டுள்ளது.

இயந்திரம் திருத்தும் கருவிகளுக்கான வரி 35 அல்லது 45 சதவிகிதமாக இருக்கும் பொதிகள், மதுபானங்கள் ஆகியவற்றிற்கான சுங்கவரி தற்போதைய அதிகரித்த நிலையிலேயே இருக்கும். கம்பியூட்டர் பாகங்களுக்கான இறக்குமதி வரி 80 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. வைத்திய உபகரணங்களுக்கான இறக்குமதி வரி 85 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக குறைப்பு.

1994-1995ஆம் ஆண்டிற்கான பட்ஜட் பற்றாக்குறை 6000 கோடி ரூபாவாகும் வருமானவரி விலக்கு 30000 ரூபாவிலிருந்து 35000 ரூபாவாக உயர்த்தப்படும் 50000 ரூபா மொத்த சம்பளம் பெறும் ஒருவருக்கு வருமான வரி இல்லை. 52000 ரூபா பெறும் வேலைசெய்யும்பெண்ணுக்கும் வருமானவரிஇல்லை.

இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள் 181 நாள் வசித்தால் இந்தியாவில் வசிக்காத இந்தியர் என்ற அந்தஸ்தை அவர்கள் இழக்கமாட்டார்கள்.

# மிக் விமானம் விழுந்து வயோதிபப் பெண் பலி

(மாஸ்கோ)

ரஷ்ய போர் விமானம் மிக்-23 விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை

# இந்தியாவும் பாகிஸ்தானும் பேசித்தீர்த்து கொள்ளட்டும்

- கனடா தெரிவிப்பு

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் பிரச்சினை இந்தியாவும் பாகிஸ்தானும் மட்டுமே சம்பந்தப்பட்டது. இருநாடுகளும் இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் இதனைத்தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று கனடா கூறியுள்ளது.

கனடாவின் ஆசிய பசுபிக் விவகார அமைச்சர் பங்களாதேசில் தமது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புகையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இத்தகைய விடயங்களில் சார்க் ஒத்துழைப்பு வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

# மதசார்பற்றஜனநாயகத்தின் சின்னமாக ஜம்மு காஷ்மீர்

- சல்மான் குர்ஷித்

(டில்லி)

பாகிஸ்தான் தனது அரசியல் ஆசைகளையும் எல்லையை விஸ்தரிக்கும் பேராசையையும் நிறைவு செய்ய ஐ.நா. மனித உரிமைக் கமிசனையும் பயன்படுத்துவதாக இந்தியாவின் வெளியுறவு இணை அமைச்சர் சல்மான் குர்ஷித் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைக் கமிசனில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் கூறுகையில்! சமய சார்பற்ற இந்திய ஜனநாயகத்தின் சின்னம் ஜம்மு காஷ்மீர் எனக் குறிப்பிட்டார். இஸ்லாமாபாத்தின் அரசியல் நோக்கம் நிறைவேற இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

# சுப்பர் ஜம்போ விமானம் தயாரிக்க போயிங் முயற்சி

எண்ணூறு பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய சுப்பர் ஜம்போ ஜெட் விமானம் ஒன்றை வடிவமைக்கும் முயற்சியில் போயிங் நிறுவனமும், ஐரோப்பிய பங்காளிகளும் இறங்கியுள்ளனர்,

பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் சீட்டியிலுள்ள போயிங் நிறுவனத்துடன் இணைந்து இந்த விமானத்தை வடிவமைப்பது தொடர்பாக கடந்த பதின்மூன்று மாதங்களாகப் பேச்சு நடத்தி வருகின்றன-

சுப்பர் ஜம்போ விமானத்திற்கான கட்டுமானச் செலவு 1500 கோடி டொலர் பிடிக்கும் எனக் கூறப்படுகிறது- எனினும் இத்தகைய விமானத்தை 600 கோடி டாலர் செலவில் தயாரிக்க முடியுமென ஏர்பஸ் நிறுவனம் கருதுகிறது-

இத்தகைய பெரிய விமானங்களின் கிராக்கி தொடர்பாக அபிப்பிராய பேதம் நிலவுகின்றபோது 600 பேர் வரை ஏற்றிச் செல்லக் கூடிய விமானங்கள் இந்த நூற்றாண்டு இறுதிக்கு முன்பாக தமக்குத் தேவைப்படும் என்று பிரிட்டிஷ் நிறுவனங்கள் கூறியுள்ளன-

# ஜாதகத்திலேயே எனக்கு தண்ணீர் ராசி உண்டு

முதல்வர் ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

எனக்கு ஜாதகத்தில் தண்ணீர் ராசி உண்டு: நான் அதை அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். இவ்வாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா அண்மையில் திருச்சிநகருக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்; அவர் அங்கு மேலும் பேசுகையில், மழையை எதிர்பாராத இந்த பெப்ரவரி மாதத்தில் திருச்சியில் மழை கொட்டுகின்றது. இதனைப் பார்க்கும் போது எனக்கு பழைய நிகழ்ச்சி ஒன்று ஞாபகம் வருகின்றது, ஒரு முறை நாங்கள் குடியிருந்த வீட்டை மாற்ற முயற்சி செய்த போது எனது தாயார் வேறு வீட்டிற்கு செல்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்: அந்தப் பகுதியில் நல்ல தண்ணீர் கிடைக்காது என்பதே தாயாரின் எதிர்ப்புக்கு காரணமாகும்: அப்போது எனது பாட்டி உடனே என்னைக் காட்டி எனது பேர்த்திக்கு நல்ல தண்ணீர் ராசி உண்டு. தண்ணீர் பிரச்சினையே வராது எனக் கூறினார்;

ஏன்! கடந்த இரண்டு ஆண்டுகளாக நல்ல மழை பொழிகிறது. இதனால் பொதுமக்களுக்கு நன்மை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மகிழ்ச்சி வறட்சியான புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட நீர் நிறைந்து எல்லா இடங்களிலும் பச்சைப் பசேலென்று காணப்படுகிறது; எனக்கு தண்ணீர் ராசி உண்டு; என்பதை பொதுநலம் கருதி ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்;

# வெளி முதலீட்டைக் கவர இந்திய நடவடிக்கை

- பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

இரு வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவ் உறுதியளித்துள்ளார்;

வெளிநாட்டு கம்பெனிகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் கூட்டு தொழில்முயற்சிகளை ஆரம்பித்துள்ள இந்திய நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரசிம்மராவ் மேலும் கூறுகையில் வெளிநாட்டு முதலீடுகளை துரிதமாக கவருவதற்கான அத்தியாவசிய முயற்சிகளை இந்தியா மேற்கொள்ளும் இந்தியாவின்புதியபொருளாதாரக் கொள்கைகளுக்கான பிரதிபலிப்பை கடந்த இரு வருடங்களிலும் இந்தியாவில் வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்த நானூறுகோடி டாலர்கள்நிரூபித்து நிற்கின்றன எனவும் தெரிவித்தார்;

இந்தியாவில் முதலீடுசெய்ய விரும்பும் வெளிநாட்டவர்களுக்கு நிலவும் ஐயப்பாடுகளை அகற்றும் நோக்கில் இம் மாநாடு கூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது;

தற்போதைய அதிகரித்த நிலையிலேயே இருக்கும். கம்பியூட்டர் பாகங்களுக்கான இறக்குமதி வரி 80 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக

# நீதிமன்றம் தீர்ப்பு

(டில்லி)

பஞ்சாப் -ஹரியானா உயர் நீதிமன்றத்தில் பிரபல திருட்டுப் பேர்வழிகளான நான்கு பெண்கள் நீதி கேட்டு வழக்கு தொடுத்துள்ளனர்;

இப் பெண்களை கைது செய்த பொலிசார் இவர்களின் நெற்றியில் திருடர்கள் எனப் பச்சை குத்தி அனுப்பி விட்டதை யடுத்து இவர்கள் பொலிசாருக்கு எதிராக நீதிமன்றம் சென்றனர்; வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவர்கள் நெற்றியில் இருப்பது உண்மையான பச்சை குத்தல் தான் என்பதை மருத்துவ நிபுணர்கள் கொண்டு சோதனை செய்து உறுதிப்படுத்திக் கொண்டது.

நான்கு பெண்களின் நெற்றியிலும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்து பச்சை குத்தல் அடையாளத்தை நீக்க வேண்டும் எனவும் இதற்கான மொத்த செலவை மாநில அரசே ஏற்கவேண்டும் எனவும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது;

# 4 பெண்கள் கைது

லெபனான் மரோனிற் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நான்கு பெண்கள் கைதாகியுள்ளனர். இப்பெண்களே ஆலயத்தில் குண்டுகளை வைத்துள்ளனர் என பொலிசார் கூறினர்; இச் சம்பவத்திற்கு பொறுப்பான குழுவின் தலைவி எனக் கருதப்படும் பெண் நாட்டிலிருந்து தப்பியோடி விட்டதாகக் கூறப்படுகிறது.

# வயோதிபப் பெண் பலி

(மாஸ்கோ)

ரஷ்ய போர் விமானம் ஒன்று குர்ஷ்க நகர வீடுகள் சிலவற்றின் மீது விழுந்ததால் 65 வயது பெண் ஒருவர் உயிரிழந்தார்.

மிக்-23 விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் விபத்து நடந்தது; விமானமோட்டி உயிர்தப்பினார்; விபத்துக்கான காரணம் ஆராயப்படுகிறது;

# புதுடில்லி விமான விபத்து ஆறு பேர் ஸ்தலத்தில் பலி

(டில்லி)

புதுடில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது டர்மினலில் நேற்று முன்தினம் சகாரா தனியார் விமான நிறுவனத்திற்குச்சொந்தமான பயிற்சி விமானமொன்று நின்று கொண்டிருந்த ஏரோபுளட் விமானத்துடன் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் ஆறு பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றும் ஏழுபேர் காயமடைந்தனர்.

சகாரா விமானம் விமானிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஐந்தாவது தடவையாகப் பறக்க முற்பட்ட போது இவ் விபத்து நேரிட்டமை குறிப்பிடத்தக்கது. விமான நிலையத்தில் இவ் விபத்தினால் ஏற்பட்ட பெருந்தீயை கட்டுப்படுத்த இருபத்தியாறு தீயணைப்பு வண்டிகள் இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாக கடுமையாகப் போரிட வேண்டி இருந்ததாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இப்பயிற்சி விமானத்தில், ஒரு பயிற்சியாளரும் பயிற்சிபெறும் மூன்று பைலட்டுகளும் இருந்தனர், ஏரோபுளட் விமானத்தில் இரண்டு பணியாளர்களும் இரண்டு பொறியியலாளர்களும்பழுது பார்த்துக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது;

# ஒரே சூலில் 6 குழந்தைகள் ஆர்ஜன்டீனாவில் பிறப்பு

வட ஆர்ஜன்டீன நகரமான ரொசாரியோவில் 37 வயதான பெண்மணி ஒருவர் ஒரே சூலில் ஆறு குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்; ரொசாரியோவில் இருக்கும் தனியார் மருத்துவ நிலையமொன்றில் நான்கு பெண் குழந்தைகளையும் இரண்டு ஆண் குழந்தைகளையும் கசான் சரம் டீ அசெல்சியோ என்னும் இத்தாய் பெற்றெடுத்தாள். இது பற்றி இக் குழந்தைகளின் தந்தை குறிப்பிடுகையில், எமக்கு ஒரு குழந்தை கிடைக்கவேண்டுமென ஆசைப்பட்டோம். ஆனால் ஆசைப்பட்டதைவிடவும் அதிகமாக எமக்கு கிடைத்துள்ளன எனத் தெரிவித்தார்.

1993-ம் ஆண்டிலும் ஆர்ஜன்டீனாவின் தலைநகரமான புவனஸ் அயர்சில் ஒரே சூலில் இவ்வாறு ஆறு குழந்தைகள் பிறந்தது குறிப்பிடத்தக்கது;

### சிந்தனைக்கு

எறும்பு ஊர கற்குழியும்
மெல்லென பாயும் தண்ணீர்
கல்லையும் உருகப் பாயும்;

— தமிழ்ப் பழமொழிகள்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## தமிழரின் பலம்

இலங்கைத் தமிழ்மக்களின் விடாமுயற்சியும், கடின உழைப்பும் பிரசித்தமானவை. இது இலங்கைக்குள் மட்டுமல்ல உலகில் பல தரப்பினாலும் அங்கீகரிக்கப்பட்டவை. வரண்ட பிராந்தியக் ஒன்றை தமது தாயகமாகக் கொண்டுள்ள இம்மக்களின் விடாமுயற்சியும், கடின உழைப்புமே அவர்களைப் பொருளாதார ரீதியிலும், ஏனைய துறைகளிலும் கௌரவத்துடன் வாழ வைத்தது.

இந்த வகையில், விடா முயற்சி, கடின உழைப்பு என்பனவற்றுடன் இன்று தமிழ்மக்களின் மனோவலிமையும் பலரையும் ஆச்சரியத்தினுள் ஆழ்த்தும் ஒன்றாகவே உள்ளது. தமிழ்மக்களின் மிகஉயர்ந்த மனோபலமே இன்று அவர்களை இவ்வளவு இன்னல்களையும், துன்பங்களையும் கண்டு சோர்வடையாது எதிர்த்துப் போராட வைத்துள்ளது. இதனை இன்று தமிழர் தாயகத்திற்கு வருகை தருபவர்கள் கண்டு திகைத்துப் போயுள்ளனர்.

இதனை வெளிப்படுத்துவதாகவே ''இன்னல்களையும், துன்பங்களையும் சுமந்து ஆனால் மனோதைரியத்துடன் வாழ்க்கை நடத்தும் மக்களே அவர்கள். இத்தனை இடர்களின் மத்தியிலும் சிரிப்புடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கும் இவர்கள் மறுகணம் துன்பங்களையும், துயரங்களையும் சந்திக்கத் தயாரான நிலையிலேயே இருக்கின்றனர்'' என்ற பெந்தஸ்கோ மதக் குழுவினரின் கூற்று உள்ளது.

இதனைப் பிரதிபலிப்பது போன்றே அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய லண்டன் லூசியின் நகர மேயர் சின்னத்தம்பி சுப்பிரமணியமும், தமிழ்மக்களின் உறுதி பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ''இங்குள்ள தமிழ்மக்கள் இன்னல்கள் துயரங்கள் வந்தபோதிலும் இவர்களின் கலை கலாசார வாழ்வைக் காண்கின்ற போதும், பசி, பட்டினி என்பனவற்றோடு அவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்வதைக் கண்டும் என் மனம் பெருமிதம் அடைகின்றது'' என்றார்.

ஆனால், இவர்களின் இப்புகழாரம் மட்டும் தமிழ் மக்களின் கடின உழைப்பிற்கும், மனவலிமைக்கும்...

# அணுக்குண்டை காவிச்செல்லும் ஏவுகணைகளை இந்தியாதானே தயாரிக்கத் தொடங்கிவிட்டது

(நேற்றைய தொடர்ச்சி)

கல்கத்தாவிற்கு தென்மேற்கில் 150மைல் தொலைவில் உள்ள பாலாசோர் என்ற ஊரில் சண்டிபூர் என்ற ஒரு பரிசோதனை ஏவுதளம் உள்ளது. அங்கிருந்து 1989மே 22ஆம் திகதி காலை 'அக்னி' என்று பெயரிடப்பட்ட ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. அணுகுண்டைவெற்றிகரமாக வெடிக்க வைத்த 15ஆண்டுகளின் பின்னர் அதை அனுப்புவதற்கான ஏவுகணையையும் இந்தியா தயாரித்து விட்டது. இதன் மூலம் முழு பாகிஸ்தானின் நிலப்பிரதேசமும், மத்திய ஆசியா, அராபிய தீபகற்பம், சீனா ஆகியவற்றின் பெரும்பகுதிகளும் இந்தியா தாக்கும் எல்லைக்குள் வந்து விட்டன, 4,000 பவுண்டு திணிவு கொண்ட சிறிய அணுகுண்டு ஒன்றை பெய்சிங் மீது இந்தியா வீசிவிட முடியும்.

அக்னியால் பழைய ஆயுதங்களையோ அல்லது அணுகுண்டுகளையோ தாங்கிச் செல்ல முடியும் என்று இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை பரிசோதனை முடிந்த பிறகு அளித்த பேட்டியில் அறிவித்தார். ஆனால் ''அமைதியின் சின்னமாக பூக்களையும் தாங்கிச் செல்ல அக்கினியால் முடியும்'' என்றும் அவுல் பக்கீர்ஜைனுல்லத்தீன் அப்துல் கலாம் கூறினார். அவரது வார்த்தைகள் மாபெரும் சமாதானப் பிரியரான மகாத்மா காந்தியை நினைவுபடுத்தின. ஏன் தனது முதல் அணுகுண்டையே இந்தியா 'சமாதான குண்டு' என்றுதான் குறிப்பிட்டது. அக்கினிக்கும் பூவிற்கும் குலாம் முடிச்சுப் போட்டதை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அக்கினி என்றால் நெருப்பு அந்திமந்தாரை அல்ல.

அக்னியை வடிவமைத்த அவர்களின் மனதிலும் நெருப்புத்தான் இருந்தது. இந்தியாவின் தயாரான ஏவுகணைகள்...

பனை செய்வதை துரிதப்படுத்துவது பற்றி இந்திய அமெரிக்க அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஏவுகணை எப்படி செயல்படுகிறது. அது எப்போது வேகம் பெறுகிறது என்பது போன்ற பல தகவல்களை கலாமுக்கும் அவரது சகாக்களுக்கும் தெரிவிக்கும் காரியம் இது ஆனால் அதிக சக்தி வாய்ந்த ஆயுதங்கள், அணுஆயுதப் பரவல் ஆகியவவை பற்றிக் கவலைப்படும் பெண்டகனும் (அமெரிக்க இராணுவ தலைமையகம்) சி. ஐ. ஏ யும் அதைத் தடுத்து விட்டன,

அக்னி பற்றி புலனாய்வு அறிக்கைகள் வாஷிங்டனுக்கு வந்தன. இந்தியாவில் அணு ஆயுதம் செலுத்தக் கூடிய ஓர் ஏவுகணையை ஏவுவதற்கான அறிகுறிகள் தெரிவதாக நுவார்கசிலுள்ள அமெரிக்க அட்டர்னிக்கு புலனாய்வு நிபுணர்கள் செய்தி அனுப்பினார்கள். ஆனால் அந்த நிபுணர்கள் கையில் இருக்கும் சாதனங்கள் ஒரு சிவிலியன் ராக்கெட்டை ராணுவ ராக்கெட்டாகக் காட்டி குழப்பி விடக்கூடியவை என்று சொல்லி அந்த அறிக்கை அலட்சியப் படுத்தப்பட்டது. விண்வெளியை சமாதான நோக்கங்களுக்காகப்பயன்படுத்துவதை அதுவும் அமெரிக்க உற்பத்திப் பொருட்களின் உதவியுடன் பயன்படுத்துவதை அமெரிக்க கொள்கை ஊக்குவித்து வந்ததால் தொழில் நுட்ப விற்பனையை அமெரிக்க ஏற்றுமதிச் சட்டம் அனுமதிக்கிறது. எனவே புலனாய்வு நிபுணர்களின் அறிக்கை குறித்து அலட்டிக் கொள்ள வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது.

கிறது. பாகிஸ்தான் தன் அணு ஆயுத ஆராய்ச்சித் திட்டத்திற்கு ஏ. க்யூ கானைத் தலைவராக நியமிக்க, இந்தியா இதையடுத்து கலாமை விண்வெளி ஆராய்ச்சி அமைப்பிலிருந்து விடுவித்து, ஐ. ஜி. எம். டி. பி.யின் தலைவராக்கியது. அக்னியால் (3000 மைல் தூரம் செல்லக் கூடியது) பிற ஆயுதங்களை சுமந்து செல்ல முடியும். என்றாலும்இன்னும் எவ்வளவோசக்தி மிக்க 'சரக்கு'களையும் எடுத்துச் செல்லும் திறனுள்ளதாக இருக்கும்

கடைசியில் அணு மற்றும் ஏவுகணைத்திட்டங்கள் ஒன்று சேர்க்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. ''ஐ சி எம். டி. பி திட்டம் நடுத்தரவகை ஏவுகணைகள் (ஐ. ஆர். பி. எம்) கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகள் (ஐ. சி. பி. எம்) ஆகியவற்றை தயாரிக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதை அரசு வெளிப்படையாக ஒப்புக்கொள்ள மறுக்கிறது'' என்று ''ஜேன்ஸ் டிபென்ஸ் வீக்லி'' யின் தில்லி செய்தியாளர் அக்னி சோதனை பற்றி செய்தி அனுப்புகையில் எழுதினார். ''அந்த உத்தாவு அணு ஆயுத திட்டத்திற்கே உரிய பூடகத்தன்மையுடன் இருக்கின்றது. ஏனென்றால் அணு ஆயுதம் தாங்கிச் செல்லாத ஐ ஆர். பி. எம்-/ஐ சி- பி- எம்- திட்டம் உண்டு என்றால் நம்புவதற்கில்லை. இரண்டும் சரியான ஜோடி'' என்று எழுதினார்.

அதாவது இந்தியாவின் நீண்டகால திட்டத்தில் ஐ. ஆர் பி எம் முடன் அணுகுண்டு அல்லது அனல் அணுகுண்டுகளை இணைப்பதைத் தவிர வேறு யோசனையும் இருக்கிறது இந்திய இராணுவம் 5,000 மைல் செல்லும், ஹைட்ரஜன் குண்டு ஏந்திய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை'களைதயாரிக்க உத்தேசித்திருக்கிறது

ஐ சி வி.எம் தான் இந்தி...

ஏன், பிலிப்பைன்ஸ் கடல், ஆஸ்திரேலியா வரை கூட எட்டும் 'அக்னி' சோதனையின் முக்கியத்துவம் அது ஒரு நடுத்தர தொலைவு ஏவுகணை என்பதால் அல்ல அதன் சக்தியை அதிகரித்து அது செல்லும் பாதையை நெறிப்படுத்தும் சிஸ்டத்தை மேலும் மெருகேற்றினால் அதை ஒரு ஐ சி வி.எம் மாக மாற்ற முடியும் என்பதுதான் விஷயம்.

இந்திய-பாகிஸ்தான் உறவு ஏகமாக கசந்து வழிகிறதென்றால், அதில்வல்லரசுகள்கைவரிசையும் தெரிகிறது, இந்திய-பாகிஸ்தான் உறவு முறைகளைத் தவிர 1959இல் சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் ஏற்பட்ட கொள்கை வேறுபாடுகளும் துணைக்கண்டத்தில் சகஜ நிலையை வெகுவாக பாதித்தன. ரஷ்யாவும், சீனாவும் தங்கள் உறவு முறித்து முகத்தைத் திருப்பிக்கொண்டதால் அவர்களிடையே அடிக்கடி எல்லைத் தகராறுகள் ஏற்பட்டன; யுத்தமே வெடித்தது; அதனால்தான் சோவியத் யூனியன் இந்தியாவுடன் இசைந்தது தன் இராணுவ தளபாடங்களுக்கு நிரந்தர வாடிக்கையாளராக்கிக் கொண்டது. சோவியத் யூனியன் தான் - பழைய மாடல் ''மிக் விமானங்களைச் செய்யும் தொழிற்சாலைகள் குண்டு வீசும் விமானங்கள் பின்னர் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கி போன்றவற்றை வரதட்சிணையாகக் கொடுத்ததன் மூலம் வலிய வந்து வழிந்ததென்றல் இந்தியாவும் (சீனாவுடன் தகராறு என்பதால்) அவற்றை இருகரம் நீட்டி வாங்கிக் கொண்டது.

பாகிஸ்தான் 1971இல் இந்தியாவிடம் தோற்றதும், தனக்கு அணு ஆயுதம் தேவை என்று முடிவெடுத்ததுதான் வேடிக்கை. இந்த விபரீதமான அணு ஆயுத சதுரங்க விளையாட்டின் ஒவ்வொரு காய் நகர்த்தலும் தொடர் விளை...

இருப்பது பாதுகாப்புக்கு நல்லது என்று இந்தியா நினைத்தது. சோவியத்யூனியன் அணுகுண்டு வைத்திருந்ததால் சீனாவுக்கு ஆசை வந்தது. சீனாதான் தங்கள் பொது எதிரி என்பதால் சோவியத்தும், இந்தியாவும் உலவ, அதைக்கண்டு பாகிஸ்தான் சீனாவுடன் நேசம்கொண்டாடியது- சீனாவுக்கும் இது இதமாக இருந்ததால் இருவருக்குமிடையே 1960களில் நெருக்கமான உறவு வளரத் தொடங்கியது- ஆக, இப்படி ஒன்றுக்குஒன்று 'செக்' வைத்துக் கொள்ளும் விளையாட்டின் விளைவாக 1970களில் சோவியத் யூனியனும், இந்தியாவும் ஒரு பக்கம்; பாகிஸ்தானும், சீனாவும் ஒருபக்கம் என இருபாசறைகள் முண்டா கட்டி நின்றன-

பரஸ்பரம் அணுகுண்டு வீசிக்கொண்டு. ஏன் அனல்-அணுகுண்டே வீசிக்கொண்டு பாகிஸ்தானுடனோ, சீனாவுடனோ மோதினாலும் தப்பில்லை என்று புதுடில்லியில் உள்ள 'இன்ஸ்டிடியூட் ஃபார்டி ஃபென்ஸ் ஸ்டடீஸ் அண்ட் அனாலிசிஸ் அமைப்பின் டைரக்டர் கே. சுப்ரமணியன் உற்சாகத்தால் துள்ளாத குறையாக தெரிவித்தார். இவர் பேச்சு, சோவியத் யூனியன் மீது அமெரிக்கா அணுக்குண்டுகளை சரமாரியாய் பொழிந்து விட்டு அமெரிக்கர்கள் வீட்டுக் கொல்லைப்புறம் பதுங்கு குழிகளில் ஒண்டிக் கொண்டு மேலே பலகையையும் போட்டு மூடிக்கொண்டால் பிழைத்துக் கொள்ளமுடியும் என்று 1980-களில் நினைத்த அமெரிக்க வலதுசாரிகளின் எண்ணத்தின் எதிரொலி போல கேட்கிறது.

கே. சுப்ரமணியன் தொடர்கிறார்: '' அணு ஆயுதம் வைத்திருப்பது இந்தியாவுக்கு அனுகூலமானது. எதிரிகளிடம் அது இருக்கும் என்பதால் அதை வேண்டாம் என்று தீர்மானிப்பது நிச்சயமான ஆபத்தை எதிர்கொள்ள வைக்கும். அணு ஆயுதம் இருப்பதன் மூலமே அணுகுண்டு வீசவில்லை; நிலைமை ஐம்பதுகளின் துவக்கத்தில் இரு வல்லரசுகளிடையே இருந்தபனிப் போரை...

## கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளே இந்தியாவின் அடுத்த இலக்கு!

இந்திய துணைக் கண்டம் கடந்த சில ஆண்டுகளில்...

அடைகின்றது'' என்றார்.

ஆனால், இவர்களின் இப்புகழாரம் மட்டும் தமிழ் மக்களின் கடின உழைப்பிற்கும், மனவலிமைக்கும் போதுமா என்றால் இல்லை என்றே கூற முடியும்; ஏனெனில், ஓரிரு நாட்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கியிருப்பவர்களால் தமிழ் மக்களின் விடாமுயற்சியையும், மனோ வலிமையையும் முழுமையாகக் கண்டு கொள்ள முடியாது.

ஒருநாளில் சுமார் 50 மைல்களுக்கு மேற்பட்ட தூரத்தை துவிச்சக்கர வண்டியில் ஓடிக் கடந்து விறகு வியாபாரம் செய்யும் ஒருவரின் கடின உழைப்பிலும், எப்பொழுதும் தாக்குதல் நடக்கலாம், மரணமடைய நேரிடலாம் என்ற போதிலும் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் தொழிலாளியின் மனோ திடத்தையும், பாடசாலையின் மீது எவ்வேளையிலும் குண்டு விழலாம் என்ற போதும் படிக்கச் செல்லும் மாணவரின் மனவுறுதியும், பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர்களின் துணிவையும் ஓரிரு நாட்களில் எவரும் கண்டுகொள்ளவோ, கணிப்பீடு செய்து கொள்ளவோ முடியாது;

இவை யாவற்றிற்கும் மேலாக தமிழீழ தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தனித்து நின்று தமிழ் மக்கள் முன்னெடுத்துச் செல்வதில் அவர்கள் காட்டும் மனவுறுதி வெளியார் எவரினதும் கற்பனைக்குக் கூட எட்டாதவை சிறிலங்கா அரசின் பல்வேறுவித ஒடுக்குமுறை மற்றும் முற்றுகை என்பனவற்றின் மத்தியிலும் போராட்டத்தை முன்னெடுப்பதில் அவர்கள் காட்டும் அக்கறையானது மனித குலத்தின் உயர்ந்தளவிலான மனோ பலத்தின் வெளிப்பாடே ஆகும்;

இவ்வுறுதியின், மனோபலத்தின் வெளிப்பாடாகவே விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளது; இவர்கள் மக்களின் விடுதலைக்காகத் தம்முயிரைத் தற்கொடை செய்யவும் தயாராகவுள்ளனர், இவர்களின் இவ் மனோ பலத்தை யாராலும் அளவீடு செய்ய முடியுமா?

இவர்களின் இம் மனோபலமே தமது விடுதலைக்காக இரண்டு நாட்டு இராணுவங்களுடன் மோத வைத்தது; ஒரு சிறிய இனத்தின் மகத்தான சாதனைக்கு வழிவகுத்தது; ஆனால், விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்திய இராணுவமும் பத்து வருடங்களுக்கு மேலாகப் போரிட்டு வரும் சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் இதனை இன்றும் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொண்டிருப்பின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வில் வெற்றி பெறலாம் என்ற அவர்களின் கனவு கலைந்து போயிருக்க வேண்டும்;

---

ப்பு அந்திமந்தாரை அல்ல.

அக்னியை வடிவமைத்த அவர்களின் மனதிலும் நெருப்புத்தான் இருந்தது. இந்தியாவில் தயாரான ஏவுகணைகள் முழுக்க முழுக்க சுதேசிச் சரக்கு என்று ஏவுகணை உற்பத்தியை திட்டமிடுவதற்குப் பொறுப்பான குழு தெரிவித்தது. இந்திய பத்திரிகையாளர்களும் இதை உறுதி செய்தார்கள்; உற்பத்தி வழிமுறைகள் அனைத்தும் சுதேசி தான். ஆனால் தொழில்நுட்பம் இறக்குமதி செய்யப்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

தும்பா பரிசோதனை மையத்தை நிறுவவும் அமெரிக்கா உதவியது; அந்தகால கட்டத்தில் அப்துல் கலாம் வர்ஜீனியாவில் உள்ள நாசாவின் லாங்கலி ரிசார்ச் சென்டரில் ராக்கெட் விஞ்ஞானம் படித்துக் கொண்டிருந்தார்.

இந்தத் தகவல்களை வைத்துகலாம். பிறகு இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் ஏவுகலம் (எஸ். எல், வி-3) உற்பத்தி செய்தார்.

இந்த எஸ்; எல்; வி-3, இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் ஏவுகலம் மட்டும் அல்ல அக்னிக்கான விஞ்ஞான ரீதியான ஒத்திகையும அரசியல் ரீதியான முகமூடியும் இதுதான். சிவில் திட்டங்களுககும் இராணுவத் திட்டங்களுக்கும் இடையே இருக்க வேண்டிய வித்தியாசம் எந்த அளவு அர்த்தமற்றதாகி விட முடியும் என்பதை இது காட்டுகிறது. ஒரு செயற்கைக் கோளை விண்வெளியில் சுற்ற விடுவதற்கும் ஒரு அணுகுண்டை குறிப்பிட்ட இலக்கில் கொண்டு போய்ப் போடுவதற்கும் ஒரே தொழில்நுட்பம்தான்தேவை;

வரலாற்று ரீதியாகப் பார்த்தால் அக்னி அமெரிக்காவில் 1960-இல் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்ட ஸ்கட் என்ற ஏவுகணையின் குழந்தை அக்னி ஏவப்படுவதற்கு ஒரே ஒரு வாரத்திற்கு முன்பு நம்ப முடியாத ஒரு நிகழ்ச்சி நடந்தது: அமெரிக்காவின் நவீன விண்வெளி தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை இந்தியாவிற்கு விற்

> இந்திய துணைக் கண்டம் கடந்த சில ஆண்டுகளில் அணு ஆயுதப் போரின் விளிம்பிலிருந்தது என்ற புதிய தகவல்களை தாங்கி கிரிட்டிக்கல் மாஸ் என்ற நூல் அண்மையில் வெளிவந்திருந்தது தெரிந்ததே. அதிலிருந்து பாகிஸ்தானின் அணு ஆயுத உற்பத்தி முயற்சி பற்றிய பகுதிகளை 23-02-94, 24-02-94ல் எமது வெளியீட்டில் பிரசுரித்திருந்தோம்; அதன் தொடர்ச்சியாக இந்தியாவின் அணு ஆயுத உற்பத்தி பற்றிய பகுதிகளை இங்கே காணலாம்.
>
> நன்றி: இந்தியா ருடே

ஆனால், இந்தியாவின் ஏவுகணைத் திட்டத்திற்கு பிரான்ஸ் அளித்த உதவியோடு ஒப்பிட்டால் அமெரிக்கா அளித்த உதவி மிகவும் குறைந்ததாகத் தோன்றுகிறது. ஜேர்மனியும், சோவியத் யூனியனும் அளித்த உதவியோடு ஒப்பிட்டால் அமெரிக்காவின் உதவி ஒன்றுமே இல்லை என்று ஆகிவிடும். வேவு பார்க்கும் ராக்கெட்டுக்களை பிரான்ஸ், இந்தியாவிலிருந்து ஏவியதோடு மட்டுமன்றி. இந்தியாவே அப்படி ஒரு ராக்கெட்டைத் தயாரிக்க 60களின் பிற்பகுதியில் லைசென்ஸ் வழங்கியது

தரையிலிருந்து ஏவப்படும் எஸ். ஏ. --2 ஏவுகணைத் தொழில் நுட்பத்தை சோவியத் இந்தியாவிற்கு விற்றது. (இந்த ஏவுகணைதான் 1960 இல் கேரி பவர்ஸ் ஓட்டிவந்த யு-2 வேவு விமானத்தை வீழ்த்தியது) அக்னி ராக்கெட்டின் மேற்புறம் இந்தியாவின் பிருத்வி ராக்கெட்டின் மேற்புறத்தைப் போன்றே இருக்கிறது. இதன் இரு புறமும் எஸ். ஏ- 2 எஞ்சின்கள் பொருத்தப்பட்டு பக்கபலமாக இருக்கின்றன. சுதேசியான, சீரான, தரை இலக்குத் தாக்கும் ஏவுகணைகளை தயாரிப்பதாக சொல்லப்படு

... [illegible] தியக் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை' களைதயாரிக்க உத்தேசித்திருக்கிறது

ஐ சி வி.எம் தான் இந்தியாவின் ஹைட்ரஜன் குண்டை ஏந்திச் செல்லும் வாகனமாக இருக்கும். அதன் வீச்சு மத்திய ஆசியா, ரஷ்யா இந்தியா பெருங்கடல், சீனா,

என்று முடிவெடுத்ததுதான் வேடிக்கை. இந்த விபரீதமான அணு ஆயுத சதுரங்க விளையாட்டின் ஒவ்வொரு காய் நகர்த்தலும் தொடர் விளைவுகளை பல நாடுகளில ஏற்படுத்தியிருக்கிறது. அப்படியேபின்னோக்கிப்போனால் சீனாவிடம் அணுகுண்டுஇருப்பதால் தன்னிடமும் ஒன்று

ஆயுதம் இருப்பதன் மூலமே அணுகுண்டு வீசவில்லை; நிலைமை ஐம்பதுகளின் துவக்கத்தில் இரு வல்லரசுகளிடையே இருந்தபனிப் போரை ஒத்திருக்கும் அணு ஆயுதம் இல்லாமல்தோல்வியடைந்து அவமானப்படுவதைவிட இந்தியா அணு ஆயுதம் வைத்திருப்பது மேல்.''

---

# குடாநாட்டில் எழுச்சியுடன் நடைபெற்ற மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக மகளிர் நாள் நேற்று முன்தினம் யாழ் குடா நாடெங்கும் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது

நேற்றுமுன்தினம் அனைத்துலகமகளிர் நாள் நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

அனைத்துலக மகளிர் நாளான நேற்று முன் தினம் குடா நாடெங்கும் எழுச்சிக் கோலமாகக் காட்சியளித்தது- மகளிர் தினத்துக்கு எழுச்சி சேர்க்கும் வகையில் அமைந்த புரட்சிகரமான வாசகங்களைத்தாங்கியபதாகைகள் குடாநாடெங்கும் உள்ள பிரதான வீதிகள் எங்கும் கட்டப்பட்டிருந்தன. இவற்றை விட மகளிர் தினத்தைப் பறைசாற்றும் வகையில் பல்வேறு சுவரொட்டிகள் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தன. அத்துடன் அனேக வீதிகளில் சிவப்பு- மஞ்சள் வர்ணத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. இவை அனைத்தும் இணைந்து குடாநாட்டை எழுச்சியின் எல்லைக்கு அழைத்துச் சென்று விட்டன.

அனைத்துலக மகளிர்நாளின் முக்கிய நிகழ்வாக குடாநாட்டின் கேந்திர நிலையங்களில் மகளிர் நாள் எழுச்சிக் கூட்டங்கள் நடைபெற்றன. கோட்ட ரீதியாக இக்கூட்டங்கள் நடைபெற்றன, வலிகாமம் கோட்டத்திற்கான எழுச்சிக் கூட்டம் மானிப்பாய் மாவீரர் நினைவு அரங்கில் நடைபெற்றது. தீவகக் கோட்டத்திற்கான எழுச்சிக் கூட்டம் அரியாலை திறந்த வெளி அரங்கில் நடைபெற்றது: அதேபோல வடமராட்சிக் கோட்டத்திற்கான எழுச்சிக் கூட்டம் பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தில் நடைபெற்றது தென்மராட்சிக கோட்டத்திற்கான எழுச்சிக கூட்டம் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது;

இவ்வாறான எழுச்சிக் கூட்டங்களில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள்உட்படபலர் உரை நிகழ்த்தினர். இக்கூட்டங்களில் ஆண்கள், பெண்கள் என்றும் மற்றும் வயது வேறுபாடு இன்றி ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டங்களின் இறுதியில் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றதாக ஆங்காங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன! (அ)

# மாநகரசபையின் மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

அனைத்துலக பெண்கள் நாள் யாழ். மாநகராட்சி மன்றத்தினால் நாவலர் கலாசார மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

இந் நிகழ்விற்கு யாழ் மாநகராட்சி மன்ற பதில்ஆணையாளர் திருவே நவரட்ணராஜா தலைமை தாங்கினார்.

மங்கள விளக்குகளை மகளிர் ஏற்றிவைக்க விழா ஆரம்பமானது. முதலில், இந்த மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் வீரச்சாவெய்திய மாவீரர்களுக்கும் பொது மக்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

விழாவின் தலைவர் தலைமை உரையை நிகழ்த்தினார் தொடர்ந்து மாநகராட்சி மன்ற வைத்திய அதிகாரி வைத்தியர் தெய்வேந்திரன், வைத்திய கலாநிதி திருமதி வீ எம். கருணாகரன், மாநகராட்சி மன்ற பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த திருமதி சரவணபவான் மாநகராட்சி மன்ற கணக்காளர் திரு- தனரஞ்சிதராஜன், செல்வி அன்புமதி, திருமதி அருந்ததி ஆகியோர் மகளிர் தினம் பற்றிய உரைகளை நிகழ்த்தினர். மாலை கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (சி)

# நீதிக்கும், சமாதானத்திற்கும் திருச்சபை குரல் கொடுக்கவேண்டும்

## மேய்ப்புப்பணி மாநாட்டில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நீதிக்காக சமாதானத்திற்காக உண்மைக்காக உரிமைக்காக கத்தோலிக்க திருச்சபை குரல்கொடுக்க வேண்டிய பாரிய கடமையை கொண்டுள்ளதாக நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற யாழ்மறைமாவட்டமேய்ப்புப் பணிமாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வின் போது வலியுறுத்தப்பட்டது.

கடந்த காலத்திலும்பார்க்க திருச்சபை இன்றைய சூழ்நிலையில் இன்னும் உறுதியாக குரல்கொடுக்க வேண்டும் எனவும் அவையில் குறிப்பிடப்பட்டது இதனடிப்படையில் மனித உரிமை மீறல்களை எடுத்துக்காட்டி கண்டித்து நீதியை நிலை நாட்ட ஒரு நிறுவனம் உருவாக்கப்படவேண்டும் எனவும் மாநாட்டில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நேற்றைய மேய்ப்புப்பணி மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வில் பண்பாடு, சமூகம், பொருளாதாரம், அரசியல், சமூகத் தொடர்பு சாதனங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப் பட்டன.

# வறிய குடும்பங்கள் வீடமைக்க உதவி நிதி

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வறிய குடும்பங்களுக்கு வீடமைப்பதற்காக மானியம் வழங்கப் படவுள்ளது.

1994ஆம் ஆண்டிற்கான தூய மானிய வீடமைப்பு திட்டத்திற்கு அமைவாக வீடமைப்பு அதிகார சபையினால் வறுமையிலும் வறுமையான குடும்பங்களுக்கு தலா 7500 ரூபா வீதம் மானியமாக வழங்கவுள்ளது. இப்பணத்தினைக் கொண்டு வறிய குடும்பங்கள் ஒவ்வொன்றும் வீடுகளை கட்டவும், ஓரளவிற்கு பூர்த்தியாகாமல் வறுமை காரணமாக வீட்டுக் கட்டினை ஒப்பேற்ற முடியாமல் உள்ளவர்களுக்கும் உதவுமுகமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 20 வீடுகளும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 20வீடுகளும் அமைப்பதற்கு மானியப் பணம் வழங்கப்படவுள்ளதெனவும், இப்பணக் கொடுப்பனவுகள் யாவும் சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்களின் ஒத்துழைப்பினூடாக செயல்படுத்தப்படவுள்ளதெனவும் வீடமைப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. க. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (41)

க. பொ. த. (உ|த) பரீட்சை

# விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ள முயற்சி

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை பரீட்சைத் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள யாழ் கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேவையான க. பொ. த. உயர்தரப்பரீட்சைக்குவிண்ணப்பிக்க தேவையான அளவு விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும்படி கோரி பரீட்சைத்திணைக்களத்திற்கு வானொலிச் செய்தி ஒன்றை அனுப்பி வைக்க யாழ் வலயம் ஒன்றின் கல்விப்பணிப் பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். (பா. தி)

யாழ் மாவட்டத்தி ற் குத

# இன்று பரிசளிப்பு

(மல்லாகம்)

சிவராத்திரிதினத்தை ஒட்டி வலி. தெற்குப் பிரதேச செயலக பிரிவுப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட இந்து சமயப் பேச்சுப் போட்டியில வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு இன்று சுன்னாகம்கதிரமலைச் சிவன்கோயிலில் இடம்பெறும் (09)

# சுயதொழில் வாய்ப்பு ஏற்பட பொ.நிறுவனம்கடனுதவி

சுயதொழில்வாய்ப்பை ஊக்குவித்து, உற்பத்திகளை அதிகரிக்கச்செய்து பொருண்மியத்தை மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல கடனுதவித் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

தொழில் வாய்ப்பு இன்றி பல்வேறு தொழில்களையும் செய்து வரும் குடும்பங்களுக்கு இக் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் இக்கடனுதவிபெறும்குடும்பங்களுக்கு தொழில் திட்டம் தொடர்பாக பயிற்சி வகுப்புக்களும் துறை சார்ந்தவர்களால் நடத்தப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது மேலும் திட்டங்களை நேரடியாகச்சென்று கண்காணித்து திட்டங்களுக்கான உள்ளீடுகளும்வழங்கப்பட்டுவருகிறது.

இவ் வகையில் சுன்னாகம் சந்திரோலை, செல்வபுரம்,

நெஞ்சம் நெக்குருகும் . . .

1 ம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் : 02 — 08



விண்ணில் : 20 — 02

# ஹெந்தல இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

ஹெந்தல கப்பல் ஒரு தொகுதி மாவுடன் இன்று திருகோணமலையிலிருந்து புறப்பட்டு வரும் என்று யாழ் அரசாங்க அதிபருக்குச்செய்தி கிடைத்துள்ளது.

இதேவேளை, றுகுணு கப்பல் நேற்று கொழும்புத்துறை முகத்திலிருந்து புறப்பட்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கப்பலில் உரமும், மலத்தியோனும் எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ, பா)

# கொடிவாரம் இன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ். கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களின் வருங்காலநன்மைகருதி யாழ். இந்து சமயப்பேரவையால் இன்று முதல் கொடிவாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கொடிதினம் கடந்த வருடம் ஒருநாள் அனுஷ்டிக்கப்பட்டது இவ் வருடம் இக் கொடிதினம் இன்று முதல் எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமைவரை ஒருவாரம் அனுஷ்டிக்கப்படும் எனவும் இந் நிகழ்வை இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா ஆரம்பித்து வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

# அரை இறுதி ஆட்டம்

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனரமைப்பு நிதிக்காக பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரை இறுதி ஆட்டம் பாசையூர் அன்ரனீஸ் மைதானத்தில் இன்று நடைபெறும்.

முதலாவது ஆட்டத்தில் ஞானமுருகன் கழகத்தை எதிர்த்து யங்ஹென்றிஸ் கழகமும், இரண்டாவது ஆட்டத்தில் பாடும்மீன் கழகத்தை எதிர்த்து சென். அன்ரனீஸ் கழகமும் மோதுகின்றன.

பிற்பகல் 3.00 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும்.

கனடாவில

நான்காண்டுகளில் சுமார்750 இலங்கை அகதிகள் ஏற்கப்படாது நிராகரிக்கப்பட்டனர் சராசரியாக ஓர் ஆண்டிற்கு 180 இலங்கையர் இதற்கு

# மருந்தாளர் இல்லாத மருந்தகம் மீதுநடவடிக்கை

(நமது நிருபர்)

மருந்தாளர் இல்லாது இயங்கும் மருந்தகங்கள் மீது யூன் மாதம் 1 ஆம் திகதிக்கு பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மருந்தாளர் இல்லாத மருந்தகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென கடந்த ஆண்டு தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை பலமருந்தகங்களில் மருந்தாளர்கள் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது இவ்வாறிருக்க செடூள் 2 B மருந்துகளை மருத்துவரின் குறிப்பு இன்றி விற்பனை செய்யக்கூடாதெனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். சுகாதார திணைக்கள கண்காணிப்பு பிரிவு இவற்றை கண்காணிக்கும் எனவும் வரும் யூன் மாதம் 1ஆம் திகதிக்கு பின்னர் மருந்தாளர் இல்லாத மருந்தகங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப் பட்டது (இ)

# நடமாடும் சேவை

(தொல்புரம்)

யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தினால் நடாத்தப்படும் நடமாடும் சேவை அண்மையில் இராமநாதன் கல்லூரியிலும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. சேதநாயகம் தலைமையில் நடைபெற்றது (41)

# உற்பத்திக்குழு நிர்வாகிகள்

(தொல்புரம்)

தமிழீழ சுயசார்பு பொருண்மியத்தை மேம்படுத்த உற்பத்திக் குழுக்கள் புனரமைக்கப்படுகின்றன. தொல்புரம் மேற்கு உற்பத்திக் குழுவின் புதிய நிர்வாக உறுப்பினர் தேர்வுகள் அண்மையில் இடம்பெற்றபோது குழுவின் தலைவராக பொன்னையா சுப்பிரமணியமும், செயலாளராக கார்த்திகேசு ஜெயகுமாரன் உட்பட 12பேர் கொண்ட குழு உறுப்பினர்களும் தெரிவாகினர். (41)

# சைவசமய பெருவிழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்தும் சைவசமயப் பெருவிழா எதிர்வரும் ஞாயிறு, திங்கள் நாட்களில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் காலை 8.30மணிமுதல் ஒரு மணிவரை நடைபெறும் இதில் ஆய்வரங்குகள், கருத்தரங்குஉரை நடைகோவை என்பன இடம்பெறும்.

பனையால்

# மெய்வல்லுநர் போட்டி

(தொல்புரம்)

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. கி. சிவமணி தலைமையில் நடைபெறவுள்ளது. மேற்படி போட்டி நிகழ்வின் போது சங்கானை கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

09.03.94

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1180

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

43-6974, 22 3088, 41-9167, 41-9396, 27-0493 28-5294, 24-4726, 26-2764, 41-5605, 26-3628, 28-1730, 28-2545, 28-3439, 42-1722, 26-3633, 26-8052, 41-9989, 26-7217, 22-6073, 24-5964, 28-0854, 27-6415, 27-7281

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

24-9549, 26-5882, 28-1062, 26-6075, 26-2277, 27-7740, 42-6157, 27-1531, 24-4367, 42-6226, 27-7750, 24-5191, 26-7353, 26-5157, 24-5119, 27-2084, 26-6333, 26-5157, 24-5119, 28-0732, 26-1583, 26-0512, 27-7081, 24-6855,

யாழ். ஸ்ரீதர் திரையில்

மகா சிவராத்திரியை முன்னிட்டு

(இன்று மட்டும்)

சிவாஜி, சாவித்திரி நடித்த

திருவிளையாடல்

(கலர்)

காட்சி நேரம்:-

பி. ப. 3-00 மணி, 6-00 மணி,

இரவு 9-30 மணி, ந. இரவு 12-30 மணி

வெள்ளி முதல்

ரஜனி நடித்த

BLOOD STONE

(கலர்)

இத்துடன் ஜனவரி-94 ஒளி வீச்சு

சேனல் இட்டு உட்பட 10 பவங்கைகளின்

முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சிகள்

08 — 1907



02 — 1993

## உயர்திரு. க. நல்லதம்பி அவர்கள்
### திதி:- 10-03-1994

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது-
ஆருயிர்த் தலைவனை நாங்கள் இழந்து!
சண்டு எங்களை இனிதாய் ஆக்கிட
இலங்கி உழைத்தவன் நாமம் மறையுமா?
மாண்டும் மாளாப் புகழ்மிகு அண்ணலே
மலரடி வணங்கிப் போற்றுதல் செய்கிறோம்!
மீண்டும் ஒருமுறை பிறப்பதேல் எங்களின்
மேனிதீண்டிட உன்னை அழைக்கிறோம்!

பெரியமாவடி,
சாவகச்சேரி.

—குடும்பத்தவர்கள்

(7701)

## மரண அறிவித்தல்
### கலாநிதி திருமதி சுலோசனா மகேந்திரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம்)

கலாநிதி ம. சுலோசனா அவர்கள் 7-3-94 அன்று காலமானார். இவர் சோ. மகேந்திரனின் (பொறியியலாளர் மின்சாரசபை கொழும்பு) அன்பு மனைவியும், தர்சனி, கௌதமி, ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. செ. சிவரட்ணம், அன்னபூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், சோமசுந்தரம் செல்வநாயகி அவர்களின் மருமகளும், திருமதி ம. லலிதாவின் (ஆசிரியை விக்டோரியா கல்லூரி) அன்புச் சகோதரியும், செ. மகேஸ்வரனின் (மனோ சிராம்பியடி லேன் யாழ்ப்பாணம்) மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சங்கானை இல்லத்தில் இன்று (10-3-94) நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பி. ப. 3 மணிக்கு கராச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
செ. சிவரட்ணம் (தகப்பன்)
செ. மகேஸ்வரன் (மனோ மைத்துனர்)

தேவாலய வீதி,
சங்கானை.

(7699)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம்மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

...திட்டங்களுக்கான உள்ளீடுகளும்வழங்கப்பட்டுவருகிறது.

இவ் வகையில் சுன்னாகம் சந்தரோடை, செல்வபுரம், குடத்தனை ஆகிய பகுதிகளைச்சேர்ந்த 88 குடும்பங்களுக்கு கால்நடை வளர்ப்பிற்கென 8,80,000 ரூபாவும் கடற்தொழில் மேற்கொள்வதற்கென குருநகர்பகுதிமீனவர்களான 102 குடும்பங்களுக்கு 5,10,000 ரூபாவும், கோப்பாய், உடுவில், கரவெட்டி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி, கண்டாவளை பகுதியில் 1013 குடும்பங்களுக்கு காலபோகநெற் செய்கைக்காக 99, 63, 655 ரூபாவும், உடுவில். கோப்பாய் பகுதியில் 87 விவசாயக் குடும்பங்களுக்கு உருளைக்கிழங்கு செய்கைக்கென 14, 65, 950 ரூபாவும், நல்லூர், அரியாலை தாலற்குழி பகுதியில் 06குடும்பங்களுக்கு சிறுகைத்தொழில் முயற்சிக்காக 60,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

### மண்ணெய்

பிடத்தக்கது: எனவே மண்ணெண்ணெய் அத்தியாவசியப் பொருள்கள் என்பதற்குள் அடங்கவில்லையா என கேள்வி எழுப்பப்படுகின்றது

(நி)

### 35 ஆயிரம்

பூர்த்தி செய்த 15 ஆயிரம் பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுகின்றனர். இவர்களுக்கான வருடாந்த நிரந்தரச்சம்பளம் 87, 200 ரூபா ஆகும். பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் போது அவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட பத்திரங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக அவர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்களை அனுப்ப முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தகைய ஆசிரியர்களுக்கு ஒரு மாதத்திற்குள் நிரந்தர நியமனக்கடிதம் அனுப்பி வைக்கப்படும் என கல்வி அமைச்சு கூறுகிறது.

இலங்கை அகதிகள் ஏற்கப்படாது நிராகரிக்கப்பட்டனர் சராசரியாக ஓர் ஆண்டிற்கு 180 இலங்கையர் இதற்கு முன்னைய ஆண்டுகளில் நிராகரிக்கப்பட்டுள்ளனர் ஆனால் இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலேயே 168 இலங்கையரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

கடந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச்31 வரையான முதற்காலாண்டிலும் கனடாவினுள் வந்திருந்த 14068 பேரின் அகதிநிலைகோரிக்கை மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. 1993 பெப்ரவரியில் புதிய சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் கனடாவுக்குள் செல்ல முடியாது போகலாம் என்ற அச்சம் காரணமாக 1992 டிசம்பர் 1993 ஜனவரி மாதங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் முண்டியடித்து கனடாவினுள் நுழைந்ததே இவ்வளவு தொகையில் அகதிநிலை கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டமைக்கு காரணமாகும்.

இவர்களில் 3435 பேர் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தீர்ப்பு வழங்கப்பட்டு அவர்களுக்கு அகதி அந்தஸ்து கடிதமும் வழங்கப்பட்டது: இக்காலப் பகுதியில் நிராகரிக்கப்பட்டவரின் தொகை 2678 ஆகும். மூன்று மாத காலத்திற்குள் இவ்வளவு தொகையானோர் நிராகரிக்கப்பட்டது இதுவே முதற்தடவை:

மாகாண ரீதியில் ஒன்ராறியோவில் 1303 பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 1993இன் முதற்காலாண்டில் 1101 இலங்கை அகதிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் 37பேர் மனுவை வாபஸ் பெற்றனர் அல்லது 'காணாமற்' போயினர். 849 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன.

உலகில் அகதிகளை 'உற்பத்தி' செய்யும் நாடுகளில் சிறிலங்கா தொடர்ந்து முன்னணி வகித்து வருவதாக கனடிய அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

என்பன இடம்பெறும்.

### பனையால் வீழ்ந்து மரணம்

சீவல் தொழிலுக்காகப் பனையேறிய ஒருவர் தவறுதலாகக் கீழே விழுந்து மரணமானார் நாகர்கோவிலைச் சேர்ந்த வேலன் இராமச்சந்திரன் என்பவரே மரணமடைந்தவராவார்.

### பரீட்சையில் சித்தி
(யாழ்ப்பாணம்)

குடும்பநல சேவையாளர் பயிற்சிப் பரீட்சையில் 27 பேர் சித்தியடைந்துள்ளனர்.

தெல்லிப்பழை பிராந்திய பயிற்சி நிலையத்தால் நடாத்தப்பட்ட இப்பரீட்சைக்கு 32 பேர் தோற்றினர் எனத் தெரியவருகின்றது (சி)

### வன்முறையால்

சில தபால் நிலையங்களில் இருந்து திருடப்பட்டு இருப்பதாகவும் வேறு வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளதாகவும், அக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

இலக்கம் இடப்படாத வாக்காளர் அட்டைகள் வீரகெட்டிய சந்தியில் கண்டெடுக்கப்பட்டதாகவும் வன்முறை மூலம் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரை மிரட்டுவதற்கு குண்டர்கள் தயாராக இருப்பதாகவும் அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பொலிசாரின் உதவியுடன் நடைபெற்ற தேர்தல் வாக்களிப்பு போன்றவை நடைபெறமாட்டாது; என்பதற்கு என்ன உத்தரவாதம் எனவும் எனவே இவ்வாறான சட்டவிரோத முறையில் தென் மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் சட்டமறுப்பு மற்றும் அரசாங்க விரோத நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இத்துடன் ஜனவரி-94 ஒளி வீச்சு
சேனல் கிட்டு உட்பட 10 புலவங்கைகளின்
முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சிகள்
தினசரி 3.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு 10.30 மணி, 3.00 மணி, 6.00 மணி
(சி-8811)

விற்பனையாகிறது!
அறிவுக்களஞ்சியம்-21
(7682)

## மரண அறிவித்தல்
### திருமதி செல்லம் கணபதிப்பிள்ளை

அச்சுவேலி தெற்கு, பயித்தோலையைச் சேர்ந்த திருமதி செல்லம் கணபதிப்பிள்ளை அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவம் கணபதிப்பிள்ளையின் (முன்னாள் மேர்கன்ரைட் கிரடிற் காப்புறுதி முகாமையாளர்), அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரவணை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரியும், சாவித்திரி (ஆசிரியை, அச்சுவேலி மகாவித்தியாலயம்), வசுந்தரா (கொழும்பு), கலாநிதி சபேசன் (அவுஸ்திரேலியா), சித்திரா, ஸ்ரீனிவாசன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), வித்தியகுமாரி (அவுஸ்ரேலியா), சுரேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரத்தினம் (திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், பாண்டியன்குளம்), திருச்செல்வம் (கொழும்பு), மஞ்சுளா அவுஸ்திரேலியா), அனுந்தி (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), சிவகுமார் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), கோமளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுந்தரம், பொன்னையா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகிந்தன், ஜெகன், தர்சினி, இராகுலன், மாதுரி, சிந்துயா, சிஜி, மயூரன், தமிழினி, நிரோசன், வினோத், விவேக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 10-03-94 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் அச்சுவேலிமுளக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பயித்தோலை,
அச்சுவேலி தெற்கு.

தகவல்:
கு. சாவித்திரி (மகள்)

(7705)